Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 தை – 29 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 31 (11.02.2005) வெள்ளிக்கிழமை இதழ்: 134

UNIT

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

PIII கணனிகள் 27,000/- முதல்

3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

Intel 2.4 கணனிகள் புதிய DELL மொனிட்டருடன் 47,900/- முதல்

சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்

Possible which impossible

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.





# எமது பலம் எப்படிப்பட்டதென்பதை எதிரிக்கு விரைவில் உணர்த்துவோம்!

## இறுதி வணக்க நிகழ்வில் தமிழ்ச்செல்வன்

(மட்டக்களப்பு)

உலக அரங்கில் எமது போராட்டம் பலமடைந்துள்ளதென்பதை உணராமல் தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் நடவடிக்கைகளில் எதிரிகள் ஈடுபட்டுள்ளனர்.

போராட்ட காலத்தில் சந்தித்த சதிகளைவிட அமைதிக் காலத்திலும் பெரும் சூறாவளியையும், பூகம்பங்களையும் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தேசியத் தலைவரின் வழிகாட்டுதலாலும் எமது மக்களின் ஒற்றுமையாலும் எமது பலம் என்ன என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் இறுதி

## யாழ்.குடாநாட்டில் நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தோடு ஆலோசனை நடத்தியபின்னர் மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்த போது படுகொலை செய்யப்பட்ட லெப. கேணல் கௌசல்யன் உள்ளிட்ட 4 போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவுக்கும் அஞ்சலி செலுத்தும்

-லெப்.கேணல் கௌசல்யன், அவருடன் சென்ற போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நடத்தப்பட்ட தாக்குதல், சமாதானத்துக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாகும்.

இலங்கை அரசு மக்களின் இயல்புநிலையைச் சிதைப்பதில் அக்கறையோடு பூடகமாகச் செயற்பட்டு வருகிறது.

இதற்கான தளமாக கிழக்குப் பிரதேசத்

லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். தாண்டியடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

அ.சந்திரநேருவுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை யாழ்.குடாநாட்டில் பூரண துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக கழகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இதற்கான தளமாக கிழக்குப் பிரதேசத் தைப் பயன்படுத்துகிறது. அங்கு தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்ற படுகொலைகள், தமிழ் மக்களை இயல்புவாழ்க்கைக்கு இட்டுச் செல்வதற்குத் தடையாகவே உள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக் கணக்கானோர் கண்ணீர் மல்க மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று விதைப்பு!

(மட்டக்களப்பு)

படுகொலை செய்யப்பட்ட மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உ்ள்ளிட்ட நான்கு போராளிகளினதும் வித்துடல்கள் நேற்று மாலை 7 மணியளவில் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன.

படுகொலை செய்யப்பட்ட விடுலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல்கள் - நேற்று அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மக்களின் இறுதி வணக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டு, இரவு களுவாஞ்சிக்குடிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு கலாசார மண்டபத்தில் பொதுமக்களின் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டன.

நேற்று நண்பகல் வித்துடல்கள் அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்கு எடுத்துவரப்பட்டு தேவநாயகம் மண்டபத்தில் வைக்கப்பட்டன.

வெலிக்கந்த சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளாரும் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரநேருவின் பூதவுடல் கொழும்பிலிருந்து நேற்றுக் காலை மட்டக்களப்பு நகருக்கு எடுத்து வரப்பட்டு தேவநாயகம் மண்டபத்தில் போராளிகளின் வித்துடல்களுடன் மக்களின் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வை முடித்துக் கொண்டு இரா. சம்பந்தன் தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரும் நேற்று காலை மட்டக்களப்பிற்கு வந்து, நகரில் தேவநாயகம் மண்டபத்தில் தமது இறுதி வணக்கத்தை செலுத்தினார்கள்.

அனைத்து மாவீரர்களின் வித்துடல்கள் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியூடாக கிரானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் ரமேஷ் உட்பட 36 போராளிகள் நேற்று மட்டக்களப்பு சென்றனர்

(மட்டக்களப்பு)

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்து வீரச்சாவடைந்த லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு பேராளிகளின் இறுதிவணக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மூத்த தளபதி கேணல் ரமேஷ் மற்றும் கரிகாலன் உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் 36 பேர் நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்பு உருவாக்க அகாஷியிடம் ஜே.வி.பி எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுனாமி நிவாரண நடவடிக்கைகளுக்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பங்கேற்கும் பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி வலியுறுத்தியுள்ள போதும் ஜே.வி.பி. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. தலைவர்களுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷிக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது சுனாமியின் பின்னர் நிவாரணங்களில் பன்முகத் தன்மை தொடர்பாக வடக்கு-கிழக்கின் நிவாரணப் பணிகளுக்காக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக் கட்டமைப்புத் தேவை என்பதை அகாஷி வலியுறுத்தினார்.

எனினும், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் லால் கந்த ஆகியோர் ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிவித்தது.

இதேவேளை இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி நேற்று அதிகாலை 5 நாள் விஜயமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அஞ்சல் அதிபரை இடம்மாற்றக் கோரி ஊழியர் அடையாள வேலைநிறுத்தம்!

காங்கேசன்துறை அஞ்சல் அதிபரை இடமாற்ற விடுக்கப்பட்ட கோரிக்கையை அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்துவருவதாகத் தெரிவித்து யாழ். மாவட்ட அஞ்சல் மற்றும் தந்தி தொடர்பாளர்கள் நேற்று காலை 8.30 மணி தொடக்கம் ஒரு மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை யாழ். பிரதம தபாலகத்தின் கதவுகளைப் பூட்டி பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள், எமது அதிகாரிகளுக்கு நாங்கள் என்ன வீட்டு வேலைக்காரர்களா அல்லது அடிமைகளா என்ற வாசகங்களை ஏந்தியவாறு சுமார் ஒருமணி நேரம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு ஏனைய அஞ்சல் நிலையங்களிலும் உள்ள அஞ்சலகங்களில் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் இந்தப் போராட்டத்தால் அஞ்சல் திணைக்கள செயற்பாடுகள் சுமார் ஒரு மணி நேரம் வரை ஸ்தம்பிதமடைந்தது. இதே வேளை தமது போராட்டத்திற்கு தகுந்த பதில் கிடைக்காததால் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் தமது போராட்டத்தை விஸ்தரிக்கவுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

# ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடர் - 114, நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சிறப்புச் சொற்பொழிவை ஆசிரியர் செ.தனேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

# முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 3.00 மணியளவில் முக்கிய கலந்துரையாடலொன்று யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், செயலாளர்கள், ஊழியர் தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் - இதில் முக்கிய தீர்மானமெடுக்கவிருப்பதால் அனைவரும் கலந்து தங்கள் கருத்தைத் தெரிவிக்குமாறும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி வகுப்புக்கள்!

உயர் கல்வி நிறுவனங்களில் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, இலவச கணினிப் பயிற்சி வகுப்புகளை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் உயர் கல்வி பயிலும் மாணவர்கள், இந்த வகுப்புக்களுக்கான விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் பேரவை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பேரவையால் நடத்தப்படும் நேர்முகத்தேர்வின் மூலமே இந்தப் பயிற்சி வகுப்புகளுக்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள பாட அலகுகளை மையமாகக் கொண்டே இந்த வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாகவும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.

# சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்கலை மாணவருக்கு கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பதிவு செய்து, உடனடி உதவிகளைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அடுத்த கட்ட தொடர்ச்சியான உதவி வழங்கலுக்காக மாணவர் பேரவையில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222 3942, 021-222 3768 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்

அஜித் –திரிஷா நடித்த

ஜி

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30





நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், நமீதா, மும்தாஜ் நடித்த

மகா நடிகன்

கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த

திருப்பாச்சி

காட்சி நேரம்: 10.30, 230, 6.30, 9.30 பு.நே.

12.02.2005 முதல் M. குமரன் Son of மகாலட்சுமி

ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நாகம்ஸ் சுன்னாகம்

4 ஆவது வெற்றிவாரமாக

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த

தேவதையைக் கண்டேன்

பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00

அடுத்த வெளியீடு திருப்பாச்சி





நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது

11.02.2005 மட்டும்

காதல் கிறுக்கன்

12.02.2005 முதல்

டைடானிக் – (தமிழாக்கம்)

கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

புதுநாற்றாய் வேரூன்றும்

உங்கள் CESCO

நிறுவனம்

பயன் தரும் பொழி

விருட்சமாக வளரும்

என்றும் ஆருடம் கூறி

இதயம் கனிந்த

நல்வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கிறோம்.

SSC

பழைய மாணவன்.

(C/3811)


# நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

## யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத் திட்டம்

(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது.)

## கேள்வி அறிவித்தல் - இல.02

## சிறுகுளங்களைப் புனரமைத்தல்

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி, இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறு குளங்களைப் புனரமைக்கும் வேலைகளுக்காக பகிரங்க கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றது.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு செயலாளருக்காக யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறிவைக்கப்பட்ட கேள்விகள் இக்ராட் ஒப்பந்தகாரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

3. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கோள்விக்கும் ரூபா 590/= ப்படி பணமாகச் செலுத்திப் 14-02-2005 இல் இருந்து 25-02-2005 பிற்பகல் 15.00 மணி வரை வேலை நேரங்களில் மேற்படி "நோராட்" அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோரமுடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் "நோராட்" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. "இக்ரட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினை கொண்டிருத்தல் ஆகாது.

6. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில்தருனர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல் வேண்டும்.

7. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் இலவசமாக பார்வையிட்டு மேலதிக விபரங்களை "நோராட்" அலுவலகம், கச்சேரி யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. 021-222 6752.

8. சமர்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைப்பத்திரமும் "இணைக்கப்பட்டு மாவட்ட செயலாளர்/அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 28.02.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதி கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப்பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

9. அதேதினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

10. கேள்விகோருவோருக்கு இதன்போது ஏற்படும் ஆகு செலவுகளுக்கு தொழில்தருனர் பொறுப்புடையவர் ஆகார்.

## விபர அட்டவணை

| இல. | வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளக்கக் கூடிய கேள்விப் பத்திர பிணைவைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பணம், வற்வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பண்டாரக்குளம், நல்லூர் (JPO/WC/PO/1/33) | 09 | 17,250.00 | 590.00 |
| 2 | மக்கியா குளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/42) | 09 | 16,800.00 | 590.00 |
| 3 | நாயன்மார்கட்டு குளம், நல்லூர் (JPO/WC/PO/1/34) | 09 | 12,400.00 | 590.00 |
| 4 | இலந்தைக் குளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/06) | 09 | 19,100.00 | 590.00 |
| 5 | சின்னக்குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/02) | 09 | 15,300.00 | 590.00 |
| 6 | வண்ணான்குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/07) | 09 | 12,000.00 | 590.00 |
| 7 | பிள்ளையார்கோயில் குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/32) | 09 | 6,500.00 | 590.00 |
| 8 | வீரமாகாளி அம்மன் கோயில் குளம், நல்லூர் (JPO/WC/PO/1/29) | 09 | 7,700.00 | 590.00 |
| 9 | பிரப்பன் குளம், அரியாலை மேற்கு (JPO/WC/PO/1/35) | 09 | 12,300.00 | 590.00 |
| 10 | வண்ணான்குளம், திருநெல்வேலி (JPO/WC/PO/1/22) | 09 | 12,800.00 | 590.00 |

க.கணேஸ்
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

12.02.2005
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/3815)

## பாகிஸ்தான் பிரதமருடன்

# சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்து

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பாகிஸ்தான் பிரதமர் சௌகாத் அஸீஷும் நேற்று முன்தினம் இரு நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இதனடிப்படையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தில் 200 பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். பாகிஸ்தான் இவ்வாறான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடுவது இதுவே முதற்தடவையாகும்.

அத்துடன், இநத உடன்படிக்கையில் இரு நாடுகளுக்குமிடையிலான விவசாயக் கூட்டிணைப்பு மற்றும் மேற்படிப்புக்காகச் செல்லும் மாணவர்களுக்கு விசா வழங்குவது என்பனவும் அடங்குகின்றன.

உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஜனாதிபதி சந்திரிகா - பாகிஸதான் ஜனாதிபதி முஷாரப்புடன் இணைந்து செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டார். இந்த உடன்படிக்கை இரண்டு நாடுகளுக்குமிடையே அதிக நன்மையளிக்கும் என இருவரும் தெரிவித்தனர்.

அத்துடன் சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டமையையிட்டு தான் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், இத்தகைய ஒத்திவைப்புக்கான வழிமுறைகளைத் தவிர்ப்பதற்கான விதிமுறைகளை உருவாக்கவேண்டுமென பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தியாவுடன் நடத்தும் பல அம்சக கலந்துரையாடல்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கி கூறியதாகவும் முஷாரப் தெரிவித்தார். ஜனாதிபதி சந்திரிகாவின் பாகிஸ்தான் பயணத்தில் அந்த நாட்டுடன் 5 உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவித்தன.





முன்றுநாள் விஜயமாக பாகிஸ்தான் சென்ற ஜனாதிபதி சந்திரிகா - அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மற்றும் பிரதமர் சௌகாத் அஸீசுடன் பேச்சுக்களை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

# கௌசல்யன் கொலை பாரதூரமான சம்பவம்

## அமைச்சர் தஸநாயக்க கண்டனம்

(கொழும்பு)

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொல்லப்பட்ட சம்பவம் பாரதூரமானது என்று, மட்டக்களப்பு மாவட்ட புனரமைப்புக்களுக்குப் பொறுப்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் தஸநாயக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் - சுனாமியின் பின்னர் மட்டக்களப்பில் இடம்பெற்ற புனரமைப்பு நடவடிக்கைகளில் கௌசல்யன் பெரும் பங்காற்றினார். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வீடமைப்புத் திட்டங்களை முன்கொணர்ந்தபோது அதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களிலும் இடங்களை ஒதுக்கித் தருவதற்கு கௌசல்யன் முன்வந்திருந்தார்.

இந்த நிலையில் கௌசல்யன் மறைந்தாலும், அந்தச் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் தஸநாயக்க தெரிவித்தார். (01)

## இந்திய – இலங்கை

# பாதுகாப்பு உடன்படிக்கையை விரைவுபடுத்த கோரிக்கை!

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ள உத்தேசிககப்பட்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையை விரைவாகச் செய்வதற்கு இந்தியா நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடாபாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாகவும் மற்றும் பலாலி விமான நிலையத்தை மீள கட்டுமானம் செய்வது தொடர்பாகவும் இருநாடுகளுக்குமிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் எமக்கு உதவிய முதல் நாடு இந்தியாவாகும். எனவே, அவர்களுக்கு நன்றி சொல்ல எமக்கு வார்த்தைகளே இல்லை.

சுனாமி அனர்த்தத்தையடுத்து அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, கனடா, ஜேர்மன் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் உதவி செய்வதற்காகவே இங்கு வந்துள்ளன. இங்கு தரித்து நிற்பதற்கல்ல. இதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# சுனாமி மீட்புக்குழு ஊழியர் சுழியில் அகப்பட்டு மரணம்!

## திருமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளநல சிகிச்சை அளிப்பதற்காக கனடாவிலிருந்து வந்திருந்த பெண்ணொருவர் கடலில் குளித்துக் கொண்டிருந்த வேளை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உளநல சிகிச்சையாளரான சோனியா என்ற 40 வயது பெண்ணே நீரிழ் மூழ்கி உயிரிழந்தவராவார்.

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிகப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சர்வதேச நாடுகளிலிருந்து 20 இற்கு மேற்பட்ட உளநல சிகிச்சையாளர்கள் திருகோணமலைக்கு வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கு உளநல சிகிச்சை அளித்துவந்தனர்.

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால், அன்றையதினம் தனது பணிகளை நிறுத்திவிட்டு திருகோணமலை கடலில் குளித்துக் கொண்டிருந்தவேளை கடற்சுழியில் அகப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இவருடன் சென்றிருந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சாரதி ஒருவரும் நீரில் மூழ்கி மயக்கமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# பெற்றோரை இழந்த பிள்ளைகளின் பாதுகாவலர்களுக்கு கொடுப்பனவு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தில் அகப்பட்டு தாய் - தந்தையர் இருவரையும் இழந்த 1087 பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக அவர்களது பாதுகாவலர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சிறுவர் நம்பிக்கை எனும் சர்வதேச நிறுவனம் உடன்பட்டுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கடிதத்தை இந்த அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி றொபேட் - சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தனவிடம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று கையளித்துள்ளார்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு மூன்று வருடங்களுக்கு மாதாந்தம் இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக, ஒரு கோடியே 85 லட்சம் ரூபாவை வழங்குவதற்கு எமது அமைப்பு முன்வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெற்றோர் இருவரையும் இழந்த 1087 பிள்ளைகளில் 35 பிள்ளைகள் மாத்திரமே சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ளனர். ஏனைய பிள்ளைகள் அனைவரும் பாதுகாவலர்களுடனேயே தங்கியுள்ளனர்.

இவ்வாறான பிள்ளைகளைப் பராமரிக்கும் உறவினர்கள் சிறுவர் மற்றும் இளைஞர் பற்றிய சட்டவரைபின் கீழ் பொருத்தமான பாதுகாவலர்களாக இருக்கவேண்டும் என சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார். (தே)

# கிரேக்க மருத்துவக் கப்பல் குறித்த சர்ச்சைகள் தொடர்கின்றன!

(திருகோணமலை)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகத் திருகோணமலை கடற்பரப்பில் தரித்திருக்கும் கிரேக்க நாட்டு மிதக்கும் வைத்தியக் கப்பல் குறித்து சர்ச்சை தொடர்கிறது.

இந்தக் கப்பலில் உள்ள வைத்தியசாலையில் நோயாளிகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் கடந்த செவ்வாய்கிழமை முதல் ஆரம்பமாக இருந்தது.

எனினும் பாதுகாப்பைக் காரணம்காட்டி இந்த வைத்தியசாலைக்கு வேறொரு வைத்தியசாலையின் பரிந்துரை இன்றி நோயாளியை நேரடியாக அனுமதிக்க முடியாது என இராணுவம் கூறி வருவதனால், கப்பலிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியவில்லை என இலங்கைக்கான கிரேக்க தூதுவர் தெரிவித்தார்.

இருநாட்டு அதிகாரிகளும் இணங்கிக் கொண்டமைக்கு ஏற்பவே குறிப்பிட்ட இந்தக் கப்பலில் வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது.

இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலமை தொடர்பாகத் தாம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த விடயம் தொடர்பாகத் தன்னிடம் விபரம் எதுவும் இல்லையென்றும், இந்தத் தகவல்கள் தனக்கும் புதியவையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# கொலைகள் தொடருமானால் அரசின் கனவு கலைந்துபோகும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலை செய்யப்பட்டதற்கு, ராணுவ உளவுப் பிரிவின் திட்டமிட்ட தாக்குதலே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சுனாமி பாதிப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

சுனாமியின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டதாகவும், எனவே அவர்கள் யுத்தம் ஒன்றுக்குச் செல்லமாட்டார்கள் என்றும், அரசாங்கம் கனவு காண்கிறது.

இந்த நிலையில் இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் அரசாங்கத்தின் கனவு கலைந்துபோகும் நிலை ஏற்படும் என்று கஜேநதிரன் எச்சரித்தார். (01)

### சங்கரியும் கண்டிக்கிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொல்லப்பட்டதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்தசங்கரியும் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான படுகொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (01)

# கௌசல்யனின் படுகொலை யுத்த சூழலை உருவாக்கும்

## பசீர் சேகுதாவூத் எச்சரிக்கை

(கொழும்பு)

கௌசல்யனின் கொலையானது நாட்டில் யுத்த சூழ்நிலையை ஏற்படுத்துமென - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.


அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப்புறக் கிராமங்கள் சதுப்புநிலப் பிரதேசங்களாகும்.

இவை யுத்தம் ஒன்றுக்கு வாய்ப்பான பிரதேசங்கள் ஆகையால், இரு தரப்பினரும் இவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே விரும்புவர். இதனால் அங்கு வாழும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை எழுந்துள்ளது.

எனவே குறிப்பிட்ட முஸ்லிம் கிராமங்களுக்குள் எவரும் ஆயுதங்களுடன் செல்வதைத் தடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (01)

# பரபரப்பான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி!



(ஈஸ்ட் லண்டன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரானஒரு நாள் போட்டித் தொடரின் ஐந்தாவது ஆட் டத்தில் - ஏழு ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்காவின் ஈஸ்ட் லண்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

சிமித் - டிவில்லியஸ் ஜோடியை ஸ்கோர் 10ஆக இருந்தபோதே டரன் கோவ் பிரித்தார். டிவில்லியஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து கலிஸ் களமிறங்கினார்.

இருவரும் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்கோர் 100ஆக உயர்ந்தது.

அப்போது 53 பந்துகளில் 8 பவுண்டரி களுடன் 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த கலிஸ், கபீர் அலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென் றார்.

அடுத்ததாகக் களமிறங்கிய கிப்ஸ் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல, பிறின்ஸ் மைதானத்துக்குள் நுழைந்தார். சிமித் - பிறின்ஸ் ஜோடியும் நிதானமாக ஆடியது.

இந்தநிலையில் ஸ்கோர் 181ஆக உயர பிறின்ஸ் ரன் அவுட்டானார். இவர் 45 பந்து களில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதைத் தொடர்ந்து சிமித்துடன் - கெம்ப் இணைந்துகொள்ள ஆட்டத்தில் சூடு பறந்தது. இங்கிலாந்து அணி வீரர்களின் பந்து வீச்சுக் களை கெம்ப் சிக்ஸர்கள், பவுண்டரிகளாக விளாசித் தள்ளினார்.

இதனால் ஸ்கோர் சடுதியாக 298ஆக உயர்ந்தது. அப்போது அபாரமாகவும், அதி ரடியாகவும் ஆடிக்கொண்டிருந்த கெம்ப் ஆட்ட மிழந்தார்.

இவர் 50 பந்துகளில் 4 பவுண்டரிகள் மற்றும் 7 சிக்ஸர்களுடன் 80 ஓட்டங்களை விளாசினார்.

இதன்பின்னர் பௌச்சர் டக்கவுட்டாக, பொலக்கும் 2 ஓட்டங்களுடன் ரன் அவுட் டானார். 50 ஓவர்கள் முடிவில் தென்னா பிரிக்க அணி 7 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களை குவித்தது.

ஆட்டநேரமுடிவில் சிமித் 131 பந்துகளில் 115 ஓட்டங்களையும், போயே 10 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 22 ஓட்டங்களைப் பெற்றபோது - ட்ரெஸ்கொதிக்கும், ஸ்கோர் 61ஆக இருந்தபோது ஜோன்ஸ் 37 ஓட்டங்



களுடனும் ஆட்டமிழந்தனர்.


இதன்பின்னர் ஸ்ரரஸ் - வோகன் ஜோடி இணைந்துகொண்டது. ஆனால் ஸ்ரரஸ் 20 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக, பீற்றர்சன் கள மிறங்கினார்.

வோகன் - பீற்றர்சன் ஜோடி அபாரமாகவும், அதிரடியாகவும் ஆடி ஓட்டங்களைக் குவித்து ஸ்கோர் 179ஆக உயர, வோகன் 70 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சோலங்கி 19 ஓட்டங்களு டனும், கொலிங்வூட் 4 ஓட்டங்களுடனும், கைல்ஸ் 15 ஓட்டங்களுடனும், கபீர் அலி 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து அணி வெற்றிக்காகப் பெரும் போராட்டம் நடத்தியபோதும், 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களையே எடுக்க முடிந்ததால் 7 ஓட்டங் களால் தோல்வியடைந்தது.

பீற்றர்சன் 69 பந்துகளில் 7 பவுண்டரிகள்,



4 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங் களையும், கோவ் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கலிஸ் -2, பொலக் -1, நெல்-1, போயே -1 விக்கெட்டை வீழ்த்தினர்.

7 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் தென்னாபிரிக்க அணி 3-1 என்ற அடிப்படை யில் முன்னிலையில் உள்ளது.

## லீமன் நீக்கம்



அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி நியூஸி லாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட வுள்ளது. ஒருநாள் தொடருக்கான அவுஸ்ரே லிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

சரியாக விளையாடாத லீமன் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். மத்தியூ ஹைடன் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

ஒருநாள் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி வருமாறு -

பொண்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், ஹைடன், மார்ட்டின், சைமண்ட்ஸ், கிளார்க், கடிச், மைக் ஹுசே, ஜேம்ஸ் ஹொப்ஸ், பிரட் ஹொக், பிரெட் லீ, ஜிலஸ்பி, கஸ்பரோவிச், மக்ரா.

விளையாட்டு

## பாகிஸ்தான் வருகைக்கு பால் தாக்ரே கண்டனம்!

(மும்பை)

பாகிஸ்தான் அணியை மும்பையில் விளை யாட அழைப்பது வெட்ககரமான மனிதர்களின் செயற்பாடு எனக் குறிப்பிட்டுள்ளார் சிவ சேனைத் தலைவர் பால் தாக்ரே.

தனது கட்சிப் பத்திரிகையான சாம்னாவில், தலையங்கப் பக்கத்தில் பாகிஸ்தான் அணி இந்தியாவில் விளையாடுவது குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்தியா அழைத்தால் மும்பையில் விளை யாடத் தயாரென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அதுகுறித்து இந்திய கிரிக் கெட் சபை அதிகாரிகளும் ஆலோசனை செய்து வருவதாகக் கருத்து வெளியாகியுள்ளது. அவை அனைத்துமே வெட்கம் கெட்டவர்களின் செய லாகவே உள்ளது.

வெட்கம்கெட்டவர்கள் எப்போதும் மகிழ்ச் சியுடனேயே இருப்பர். அவர்களது மகிழ்ச்சியை ஏன் அபகரிக்கவேண்டும். ஏன் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை மட்டும் இந்தியாவில் விளையாட அழைக்கவேண்டும்.

அந்த நாட்டு சிறப்புத் தீவிரவாதக் குழு வையும் அழைத்து ஒரு ஆட்டத்தை நடத்த லாமே என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கோப்பாய் கோட்ட வலைப்பந்தாட்ட காலிறுதி ஆட்டங்கள் இன்று!

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட் டிகள் கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும் நடைபெற்று வருகின்றன.


இதில் இன்று நடைபெறும் காலிறுதிப் போட்டிகள் யாவும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக வுள்ளன.

15 வயதுப்பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்தை எதிர்த்து புனித திரேசா மகளிர் கல்லூரியும், புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலயமும், கோப்பாய் கிறிஸ்தவக் கல் லூரியை எதிர்த்து புத்தகலட்டி விஷ்ணுவித்தி யாலயமும், அத்தியார் இந்துக்கல்லூரியை எதிர்த்து இடைக்காடு மகாவித்தியாலயமும் -

17 வயதுப்பிரிவில் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும், கோப்பாய் மகா வித்தியாலயத்தை எதிர்த்து புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியும், ஆவரங்கால் நடராஜஇராம லிங்க வித்தியாலயத்தை எதிர்த்து அத்தியார் இந்துக்கல்லூரியும், புனித திரேசா மகளிர் கல்லூரியை எதிர்த்து இடைக்காடு மகாவித்தி யாலயமும் -

19 வயதுப் பிரிவில் அத்தியார் இந்துக்கல் லூரியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜஇராம லிங்க வித்தியாலயமும், உரும்பிராய் இந்துக் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் மோதவுள்ளன. (12)

## ஹைதராபாத் ரெனிஸ் காலிறுதிச் சுற்றில் சானியா நுழைந்தார்!



(ஹைதராபாத்)

ஹைதராபாத்தில் நடைபெற்றுவரும் உலக மகளிர் ரெனிஸ் போட்டியில், சீன வீராங்கனை ஜி ஜெங்கைத் தோற்கடித்து காலிறுதி ஆட்டத் துக்கு இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா முன்னேறினார் .

சென்டர் கோர்ட்டில் புதன்கிழமை மாலை நடைபெற்ற காலிறுதிக்கு முன்னைய சுற்று ஆட்டத்தில் சானியா 6-1, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் சீன வீராங்கனையைத் தோற் கடித்து, ரசிகர்களுக்கு விருந்தளித்தார்.

இதற்கு முன்னதாக நடைபெற்ற ஆட் டத்தில், சீன வீராங்கனையிடம் தாய்லாந்தின் தாமரைன் தானா சுகர்ன் அதிர்ச்சித் தோல் வியுற்றார்.

பீஜிங்கைச் சேர்ந்தவரும் இந்தப் போட்டித் தரநிலையில் 6ஆவது இடத்தில் உள்ளவரு மான தியான் தியான் சன் 6-1, 6-2 என்ற நேர் செட்களில் தானாசுகர்னைத் தோற்கடித்து காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

தோல்வியுற்ற தானாசுகர்ன் உலகத் தர வரிசையில் 67ஆவது இடத்தில் இருந்தபோதி லும் ஆட்டம் ஏறக்குறைய ஒருதரப்பாகவே அமைந்திருந்தது. எதிராளியை சிறிதும் முன் னேறவிடாமல் ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தினார் 23 வயதாகும் சன்.

இவர் உலகத் தரவரிசையில் 138ஆவது இடத்திலும், இந்தப் போட்டித் தரநிலையில் இடம்பெறாமலும் இருந்தார்.

அடுத்து ஜேர்மனி வீராங்கனை அன்னா லெனாகுரோன்பெல்டுடன் காலிறு மோதலில் சன் மோதவுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் உக்ரைன் வீராங் கனை அல்யோனா பாண்டரென்கோ 6-3, 6-7 (2-7), 6-4 என்ற செட் கணக்கில் ஹங்கேரி வீராங்கனை மெலிண்டா சிசிங்கின் சவாலை அடக்கி, காலிறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தார்.

## சலஞ்சர்கிண்ண கிரிக்கெட் இந்திய 'ஏ' அணி வெற்றி!



மும்பையில் நடந்த சலஞ்சர் கிண்ண கிரிக் கெட் ஆட்டத்தில் ராவிட் அணி வெற்றிபெற்றது.

சலஞ்சர் கிண்ணத்துக்கான ஒருநாள் கிரிக் கெட் போட்டி மும்பையில் நடைபெற்று வருகி றது. இந்தப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கடைசி லீக் ஆட்டத்தில் இந்திய ஏ மற்றும் பி அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏ அணி, நிர்ண யிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. கப்டன் ராவிட் 115 ஓட்டங்களை விளாசினார். 95 பந்துகளை எதிர்கொண்ட ராவிட் 15 பவுண் டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடித்தார். முன்னைய ஆட்டத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த கைவ் 63 ஓட்டங்களைப் பெற்றார்.

வேகப்பந்து வீச்சாளர் நெக்ரா 3 விக்கெட் டுக்களையும், கப்டன் ஷேவாக் 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். 295 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கில் அடுத்து பி அணி துடுப்பெடுத்தாடியது. ஆட்டத்தின் தொடக்கத்திலேயே இந்த அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. தொடக்க ஆட்டக்காரர் உத்தப்பா மட்டும் நிலைத்துநின்று ஆடி 66 ஓட்டங்களைச் சேர்த்தார். மற்ற வீரர்கள் எவரும் அதிகநேரம் நீடிக்கவில்லை.

இதனால் 36.5 ஓவர்கள் முடிந்தநிலையில் பி அணி 204 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்ததால் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஏ அணி வெற்றி பெற்றது. தினேஷ் மொங்கியா மற்றும் முரளி கார்த்திக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைச் சாய்த் தனர்.

2 லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்ற ஏ அணி இறுதி வாய்ப்பை எட்டியது. இன்றைய இறுதி ஆட்டத்தில் இந்திய சீனியர் மற்றும் இந்திய ஏ அணிகள் மோதவுள்ளன.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உள்ளக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக, மாகாண கல்வி அமைச்சு அனைத்து கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த அரியரட்ணம்- முல்லைத்தீவு வலயத்துக்கும், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ச.குருகுலராசா - கிளிநொச்சி வலயத்துக்கும், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய தெய்வேந்திரன் - மடு வலயக் கல்விப் பணிப்பாளராகவும், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.குருஸ் - துணுக்காய் கல்வி வலயத்துக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் - யாழ் கல்வி வலயத்துக்கும், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கும், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் செயலகத்துக்கும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெறும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி தமது புதிய பொறுப்புகளை ஏற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மகளீர் அபிவிருத்தி நிலையத்தில் 4 ஆம் திகதி நடைபெற்ற மாணவர்களுக்கு கல்விசார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் - கற்றல் உபகரணங்களில் ஒரு தொகுதியை மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் மாணவியொரு வருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### சுழிபுரம் பிரதான வீதியில்

## புதிதாக மதுபானசாலை திறப்பதை எதிர்த்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(சுழிபுரம்)

பாடசாலைக்கு அருகில் மதுபான நிலையம் திறப்பதை ஆட்சேபித்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகிலேயே மதுபான சாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த ஊர்ப் பொது மக்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்தக் கல்லூரிக்கு அருகில் இன்னுமொரு பாடசாலையான ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் என்பன அமைந்த அமைதியான பிரதேசம் எனப் பொது மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் கல்வி கற்கும் பகுதியில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் 19-01-2005 இல் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்து வெளியிட்டபோது, மூன்று கிராம அலுவலர்கள் இந்தப் பகுதியில் மதுபானசாலை திறப் பதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அத்துடன் மதுபானசாலை திறக்கப்படுவதை எதிர்த்தவர்களுக்கு மறைமுக மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் மதுபானசாலையைத் திறப்பதற்கான அனுமதியை சங்கானை பிரதேச செயலர் தற்காலிகமாகப் பிற்போட்டுள்ளார்.

இதனையடுத்தே அந்த ஊர் கிராம மக்கள் சமூக நலன்கருதி மதுபான சாலை திறப்பதைத் தடுக்க வேண்டுமென கோரி, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

## சுனாமி அனர்த்த முறைப்பாட்டுக்கான கருமபீடம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சுனாமி அனர்த்த நிலைமைகள் தொடர்பான பணிகளில் காணப்படும் குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதற்கான விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்ள்ளது.

இதில் பதிவுகளை மேற்கொள்ளல், நிவாரணம் பெறுதல் மற்றும் சுனாமி தொடர்புடைய குறைகள் எவையாக இருப்பினும், இந்தக் கருமபீடத்தில் சென்று அதற்குப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் அலுவலரிடம் தெரிவித்து, முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிவை மேற்கொள்ளும்படி, பொது மக்களுக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் அறிவித்துள்ளார். (12)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சாரணர் ஸ்தாபகர் தினப் போட்டிகள்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தால் நடத்தப்படும் சாரண ஸ்தாபகர் தினப்போட்டிகள் - ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைகளின் மாவட்ட ஆணையாளர் எஸ்.சிவபாதரத்தினம் தெரிவித்துள்ளார்.

### 'மீண்டும் வரும் நாட்கள்' கவிதை நூல் வெளியீடு

கவிஞர் மு.புஸ்பராஜன் எழுதிய "மீண்டும் வரும் நாட்கள்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா - நாளை மாலை 4.45 மணிக்குத் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் அ.யேசுராசா வெளியீட்டுரை நிகழ்த்தவுள்ளார். மதிப்பீட்டுரையை கலாநிதி செ.திருநாவுக்கரசு, ம.சாம் பிரதீபன், மன்றக் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

### கட்டடப் பொருட்கள் விநியோகம்

நீண்ட காலமாக பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு, பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலையால் இருபதாயிரம் ரூபா பெறுமதியான, கட்டட அமைப்புக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பொருட்கள் பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலையால் தெரிவு செய்யப்பட்ட 14 பேருக்கு வழங்கப்படுகிறது.

இதில் - இருபதாயிரம் ரூபா பெறுமதியான சீமெந்து, கம்பி, கல், மண், தகரம் போன்ற கட்டட அமைப்புக்குத் தேவையான பொருட்களே வழங்கப்படுவதாக பருத்தித்துறை கால்நடை வைத்தியர் சி.வசீகரன் தெரிவித்தார். (12)

### மனையியல் பயிற்சி நெறி

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இந்த வருடத்திற்கான மகளிர் மனைப்பெருளியல் மற்றும் தையல் பயிற்சி நெறியை எதிர் வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

ஒன்பது மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கு, 50 யுவதிகள் அனுமதிக்கப்பட்ட வுள்ளனர்.

தையல், மனைப்பொருளியல் தலையலங்காரம், பூவேலை ஆகிய பயிற்சிகளுடன் தலைமைத்துவம், கூட்டுறவு ஆகிய பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சி முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு, அதில் சித்தி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாளர் தேவல்லி செல்வரத்தினம் தெரிவித்தார்.

## மகளிர் பிரிவுக்கான அரசியல் செயலகம் சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது

தென்மராட்சி கோட்டத்தின் மகளிர் பிரிவின் அரசியற்துறைக் கோட்டச் செயலகம் - கடந்த செவ்வாக்கிழமை சாவகச்சேரி கந்தையா வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி மகளிர் சங்கத் தலைவி திருமதி திரவியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரை தென்மராட்சிக் கோட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலை ஏற்றிவைத்தார்.

ஈகைச் சுடரை சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தென்மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார்.

அலுவலகக் கட்டடத்தை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அரச திணைக்களங்களின் அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

### வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின 14 ஆவது வருடாந்தப் பொதுககூட்டம் இன்று காலை 10 மணிக்கு இணையப் பணிமமையில், தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

## 50 வீதமான பாடசாலைகளில் பாவனைக்குதவாத கட்டடங்கள்

### கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில், 50 வீதமான பாடசாலைகளிலுள்ள வகுப்புக் கட்டடங்களில் கட்டடங்கள் சில இடித்து, புதிதாகக்கட்ட வேண்டிய நிலையில் உள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலைகளில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்குப் போதிய இடம் இல்லாமையாலும், இந்தக் கட்டடங்களைப் புதிதாக அமைகக அரசு முன்வராத காரணத்தாலும், பழமை வாய்ந்த கட்டடங்களுக்குள்ளேயே மாணவர் கள் தொடர்ந்தும் கல்வி பயில வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலே இவ்வாறான நெருக்கடிநிலைமை தொடர்ந்து வருகிறது.

இடித்து மீண்டும் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது குறித்து, மாகாணக் கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தியும், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொள்ளவில்லை.

அண்மையில் பாடசாலை ஒன்றின் கூரை வீழ்ந்து, மாணவர்கள் காயமடைந்ததன் பின்னர் - பாடசாலை அதிபர்கள் தமது பழுதடைந்த கட்டடங்களைப் புதிதாக அமைத்துத் தருமாறு கோரிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தன்னலங்கருதாத பெரியார்கள் மறைந்தும் மறையாமல் வாழ்கின்றனர்

### ஸ்கந்தா பரிசளிப்பு விழாவில் உரை

சமூக நன்மையைக் கருத்திற் கொண்டு, தன்நலம் பாராது சேவை செய்கின்ற பல நல்மனம் படைத்த பெரியார்கள் - கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்கள்.

அவர்களின் தியாகங்கள் காரணமாக இன்றும் அவர்கள் சமுதாயத்தில் மறைந்தும், மறையாதவர்களாக வாழ்கிறார்கள்.

அவர்களின் அத்தகைய சேவை காரணமாக - இன்று வாழும் நாம் பல வளங்களைப் பெற்று எம்மை வளப்படுத்த முடிகிறது. அந்தப் பெரியார்கள் அன்று செய்த மிக உயர்ந்த பணிக்காக நாங்கள் இன்று சிலை வடித்துப் போற்றுகிறோம் என,

அண்மையில் நடை பெற்ற கந்தரோடை ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், அங்கு கல்வி கற்று வெளியேறிய வைத் தியர் சுப்பிரமணியத்தின் உரு வச்சிலை திரைநீக்கம் செய்யும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகைதந்த பழைய மாணவரும், தற்போது அமெரிக்காவில் வசிப்ப வருமான எஸ்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவி சரஸ்வதி தர்மலிங்கத்தால் பி.எஸ்.ஞாபகார்த்த சிலை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இங்கு பிரதம விருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வரலாற்றுப் பதிவுகளாக இன்னும் சில பாடசாலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மாணவர்களின் அகக் கண்ணைத் திறந்து, அறிவு ஒளி ஏற்றுபவரே ஆசான். அந்தக் காலத்து ஆசிரியர்கள் படிப்பை மட்டுமல்ல, ஒழுக்கத்தையும் மாணவர்களுக்குப் புகட்டுவதில் மிகுந்த சிரத்தையுடன் செயற்பட்டனர். இதனாலேயே நாம் இன்றும் பிறநாடுகளில் ஒழுக்க சீலர்களாக வாழ முடிகிறது எனத் தெரிவித்தார்.

கல்லூரி உப அதிபர் திருமுருகன் உரையாற்றுகையில் -

பல ஏழை மக்களுக்குப் பணம் பெறாது வைத்தியம் செய்ததுடன், திரும்பி வீட்டுக்கு வர பணம் இல்லாதபோது, பணம் கொடுத்தனுப்பும் வள்ளல் தான் பி.எஸ் வைத்தியர்.

அன்பு, அறிவு, உயிர் அனைத்தையும் பாடசாலைக்கு வழங்கியதால், அந்தக் காலத்தில் ஏராளமான மாணவர்கள் - வைத்தியர், பொறியியலாளர், வங்கியாளர், அதிபர், ஆசிரியர், கணக்காளராக வரமுடிந்தது.

இன்றுள்ளதைப் போல அந்தக் காலத்தில் தனியார் கல்வி நிலையங்கள் இல்லை. ஆனால் ஆசிரியர்கள் பற்றுடன் சேவை புரிந்ததால், பல மாணவர்கள் பதவிகளைப் பெறமுடிந்தது எனக் கூறினார்.

110 ஆவது ஆண்டு நிறைவு மலரை வெளியிட்டு வைத்து, வெளியீட்டுரையாற்றிய சிவசர வணபவன் (சிற்பி) உரையாற்றுகையில் -

எமது முன்னோர்களை நாம் அறிந்திருக்க முடியாது. ஆனால் அவர்களின் ஞாபகார்த்தமாக நூலை வெளியீடு செய்ய முடியும். அந்த வகையில், ஸ்கந்தாவின் பழைய சம்பவங்கள், முன்னைய புகழ்பூத்த ஆசிரியர்கள் அன்றைய நிகழ்வுகளை ஆவணப்படுத்தி, எதிர்காலச் சந்ததியினருக்கு தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் ஆண்டுமலர் மீண்டும் வெளியிட்டு வைக்கப்படுகிறது. எனவே மீண்டும் இந்தக் கல்லூரிக்கு பழைய பொற்காலம் அதாவது - ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் காலத்து நற்புகழ், பெருமை, கீர்த்தி மலர ஆரம்பித்து விட்டது என்பதில் ஐயமில்லை என கூறினார். (101)



## சிநேகிதியே

# கடல் வழியாக உலகைச் சுற்றி... உலக சாதனை படைத்த பெண்

**71** நாட்களில், கடல் வழியாக உலகைச் சுற்றி புதிய சாதனை படைத்திருக்கிறார் பிரிட்டனைச் சேர்ந்த 28 வயது இளம் பெண் எலென் மக் ஆர்தர் என்பவர்.

அவருடைய சாதனை பிரமிக்கச் செய்கிறது. இவர் குட்டிப் படகில் 71 நாட்களில் கடல் வழியாக உலகைச் சுற்றி, புதிய சாதனை படைத்திருக்கிறார். பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் கடல் எல்லையைப் பிரிக்கும் பகுதியிலிருந்து நவம்பர் 28 ஆம் திகதி படகில் தன் பயணத்தை மேற்கொண்ட இவர் - அதற்குப்பிறகு 42 ஆயிரம் கிலோமீற்றர் மக் ஆர்தர் மேற்கொண்ட நீண்ட பயணம் கடந்த செவ்வாய்க்கிழமை (இந்திய நேரப்படி) 3.59 இற்கு ஆரம்பித்த இடத்திலேயே முடித்தார். கடல் வழியே அவர் கடந்த தூரம் 42 ஆயிரம் கிலோமீற்றர். பயணம் செய்ய எடுத்துக் கொண்ட நேரம் 71 நாட்கள் 14 மணித்தியாலங்கள் 18 நிமிடம் 33 விநாடிகளாகும்.

சாதனை...

சோதனை இது புதிய உலக சாதனையும்கூட. பிரான்ஸ் நாட்டின் பிரான்ஸ்ஜோயன் என்பவர் 72 நாட்கள் 22 மணித்தியாலம் 54 நிமிட 22 விநாடிகளில் சாதனை செய்திருந்தார். இதைவிட ஒரு நாள் 8 மணித்தியால 35 நிமி டம் 49 விநாடிகள் முன்பாக உலகைச் சுற்றிப் புதிய சாதனை படைத்தாள் மக் ஆர்தர்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில்-

சாதனைக்குப் பின்னால் சந்தித்த சோதனைகள் கொஞ்சம் நஞ்சமல்ல... எதற்கும் தளரவில்லை. கிறிஸ்மஸ் தினத்தன்று கடும் புயலில் சிக்கித் தவித்தாராம். ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் மட்டுமே தூக்கம். குட்டியாய் சமையல் அடுப்பில் சமையலைக்கவனிப்பாராம். கடல் நீரைச் சுத்திகரித்து குடித்திருக்கிறார். களைப்பாக இருக்கிறது . ஆனாலும் உற்சாகமாக இருக்கிறது. இனி சில நாட்கள் முழு ஓய்வுதான் என்கிறார் உற்சாகப் பறவையாக.


இவரின் சாதனை என்னைப் பிரமிக்கச் செய்கிறது என்று புகழ்கிறார் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேர். ஒட்டுமொத்த தேசமும் உங்களால் பெருமிதம் அடைகிறது. உலகெங்கிலுமுள்ள பலர் உங்கள் திறமையை, துணிச்சலை, தன்னம்பிக்கையை முன் மாதிரியாக இனி எடுத்துக் கொள்வார்கள் எனப் பாரா



ட்டுகிறார் பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்.

இவரின் சாதனை என்றும் தண்ணீர் தேசம்தான். ☾☆

# குடும்பம் ஒரு கதம்பம்



வாழ்வில் நல்லது, கெட்டது. நடந்தவையாக இருக்கட்டும். இனிமேல் நடப்பவை நல்லவையாக அமைய, நாம் முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொருவர் மனதிலும் கோபங்களும், விரோதங்களும், வெறுப்புக்களும் இல்லாமல் இருத்தல் வேண்டும். இவை அனைத்துக்கும் காரணம் - ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழாமையே பிரதான காரணமாக அமைகிறது.

சமுகத்திலுள்ளவர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, அடுத்தவரின் உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளித்து வாழ்பவர்களேயானால், வாழ்வில் மகிழ்ச்சியைத் தவிர வேறிருக்காது. ஆனால் இன்றைய காலம் அன்பு, பாசம் பற்றிப் பேசக்கூட நேரமில்லாது எல்லோரும் சுயநலமாக வாழ்கிறோம். இன்று எம்மில் எத்தனைபேர் நியாயம், நன்றி, விசுவாசத்துடன் இருக்கிறார்கள்.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து உலகத்தொடர்புகள் சுருங்கிவர, மனிதர்களுடைய மனங்களும் விசாலமின்றிச் சுருங்கிவிட்டது. ஏமாற்றுப் புத்திகளும், சுயநலப் போக்குகளும்தான் எம் மத்தியில் வளர்ச்சியடைந்து வருகிறது.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே - அது நல்லவர் ஆவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்பது உண்மைதான்.

நம் வாழ்க்கையின் அடி, அத்திவாரம் குடும்பம் ஆகும். அதன் பிரதான அங்கத்தவர்கள் கணவன் - மனைவி. இன்று பல கணவன் - மனைவி உறவுகள் பிளவுபட்டு நிற்கின்றன. கருத்து வேற்றுமைகளும், புரிந்துணர்வின்மையும், தன் முனைப்பும் பிளவுக்குக் காரணமாக அமைகிறது.

சிலர் தினமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டு அவற்றை உலகுக்கு மறைப்பதற்காகச் சேர்ந்து வாழ்கிறார்கள். இப்படியானவர்களின் குடும்பத்தில் அவர்களுடைய மகிழ்ச்சி மட்டுமன்றி, இவர்களைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளின் மகிழ்ச்சியும் தொலைக்கப்படுகிறது.

இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது குழந்தைகளேயாகும். அவர்களுக்கு உரிய முறையில் அன்பும், அரவணைப்பும் கிடைப்பதில்லை. தாய்க்கும், தந்தைக்கும் எந்தநேரமும் முறுகல் நிலை காணப்படுவதால், அவர்கள் மனம் குழப்பநிலை அடைகிறது. எதற்கெடுத்தாலும் திட்டுவார்கள், அடிப்பார்கள். இதனால் பிள்ளைகளின் மனதில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகி விரக்தி ஏற்படுவதால், தவறான வழிகளை நாடிச்செல்லத் தலைப்படுவார்கள்.

(தொடரும்...)

# வெரிகோஸ் வெயின்ஸ்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

அதனுடன் நம் உணவு முறைகளினாலும் இரத்தம் கட்டுப்படுகிறது.

வெரின்ஸ் மெல்லிய குழாய் போன்றது. இரத்தம் மேலே போக முடியாதபோது கட்டிபட்டு, உறைந்து குழாய்கள் வீங்கத் தொடங்குகின்றன. ஒரு சிலருக்கு நாளங்கள் வீங்கி, வெளியில் தெரியாமல் கால் (கள்) வீங்கி வலிமட்டும் தெரியும். ஒரு சிலருக்கு நாளங்களில் கட்டிபட்ட இரத்தம் - நிறம் மாறி கரு நீலமாகி இரத்தக் குழாய்களும் புடைத்து வெளியில் தெரியும். கைகளில் கால்களில் கூட இரத்தக் குழாய்கள் சிலருக்கு வெளியில் புடைத்துக் கொண்டிருக்கும். இது போல் இரத்தக் குழாய்கள் வீங்கி புடைத்து வெளியில் தெரிவதையே வெரிகோஸ் வெயின்ஸ் என்கிறார்கள். இது போல் அல்லாமல் நரம்புச் சிலந்தி எனப்படும் வெயின்ஸ் தொடைகளிலும் முழங்கால்களுக்குக் கீழும் தோற்பரப்புக்களில் வலைப்பின்னல் போன்று நெளி நெளியாகவும் இரத்தச் சிவப்பிலும் கருநீலச் சிவப்பிலும், சிலருக்கு கருநீலமாகவும், இரத்தம் கட்டிபட்ட நாட்களைப் பொறுத்து அந்தந்த நிறங்களில் வெளிப்புறமாகத் தெரியும். அதனுடன் முழங்கால் மூட்டுகளின் பின்புறத்திலும் சிலருக்கு வீக்கம் காணப்படும்.

இந்த வகையான இரத்த ஓட்டக் குறைபாடு ஆண்களை விட பெண்களுக்கு அதாவது - கிராமத்துப் பெண்களைவிட நகர்ப்புற பெண்களுக்கு அதிகமாக வரவாய்ப்பு ஏற்படுகிறது. மருத்துவர்கள் கால்வலி என்றால் கால்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். கால் வலி என்றதும் மருத்துவர்கள் நின்று கொண்டு வேலை செய்கிறீர்களா? ஆசிரியையா? எனக் கேட்கின்றனர். பெரும்பாலும் நின்றபடியே வீட்டு வேலை மற்றும் அலுவலகவேலைகளைச் செய்வதால் பாதிப்பு ஏற்படுகிறது. (முற்றும்).

# மனமே! மீண்டெழுவாய்



போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.

மனமே! அத்தனை உயிர்களையும் இழந்து தவிக்கிறாயா! தவிப்பாய் தான். அது உன் மனத்துக்கே உரித்தான இயல்பு. கட்டிய மனைவியும், பெற்றெடுத்த செல்வங்களும் ஒரேயொரு நொடிப்பொழுதில் உன் சக்திக்கு அப்பால், உன் கண் முன்னால் இழுத்துச் செல்வதைப் பார்த்த உன் மனம் முடியாமையால் ஏங்கித் தவிக்கும்.

மனைவியின் இன்ப உணர்வுகளும், அவளது பக்கத் துணையும், அவளால் உருவாக்கப்பட்ட உன் மழலைச் செல்வங்களும் உன் கைநழுவிப்போன காட்சியும் அதனால் ஏற்பட்ட வெறுமையும் கொடூரமாக உன்னை உலுப்பும்.

உலுப்பும் கொடூரத்தைச் சொல்லிச் சொல்லி ஒரு கணமோ, ஒரு பொழுதிலோ ஒருவன் அன்றே அழுது முடித்துவிடு யாரிடத்திலும் குறைகாணாமல் உன் கண்களை மூடிவிடு.

மூடிய கண்களுக்குள் சிந்தனையைச் சற்றுத் தொட்டுப்பார். தாய் தந்தையரால் நீ உருவாக்கப்பட்டாய்; அவர்களால் வளர்க்கப்பட்டாய்; வளர்ந்தாய்; பெரியவனானாய். வாழ்க்கைத் துணையை உன் உள, உடல், இயற்கை உந்தலால் காதலித்தாய். ஏற்றுக் கொண்டாய். திருமணமானதில் ஓர் பெண்ணை இயற்கையே உனக்கு வழங்கியது. அவள் தந்த பாலியல் இன்பங்கூட இயற்கையாய் உருவாக்கப்பட்டது.

குழந்தையைப் பெற்றெடுத்தாய். அந்தக் குழந்தைக்கு உயிரையும் உடலையும் வடிவமைத்து உன் வாரிசாகத் தந்தவன் யார்.

நீ உழைத்தாய். பாடுபட்டாய். மனைவியும் மக்களும் சந்தேசமாய் இருக்க உன்னையே நீ அர்ப்பணித்தாய். பாசமும் பந்தமும் பெருகியது. அந்தப் பாசமும், பந்தமும் உன் மனதுக்குள் இருந்தே உருவானது.

தாயோடு பிறந்த உயிர்களின் வாழ்க்கையில் உறவுகள் இணைவதும், சந்ததிகள் பெருகுவது இடையில் சந்தித்த பாசப் பிணைப்புக்கள் என்பதை நினைத்துக் கொள். ஆயிரம் ஆயிரம் உறவுகள் இடையில் வரும். நீ போகும் போது தனித்துத்தான் போவாய் என்பது உனக்குத் தெரியும்.

உன்னால் நீ உன் மனைவியை இழந்தாயா? உன் குழந்தைகளை இழந்தாயா? இயற்கையின் ஆவேசம் கொடூரமான போது, உன்னால் என்ன செய்ய முடியும். 'படைத்தவனே எடுத்துக் கொண்டான்' என்று உன் மனதைத் தேற்றிக்கொள் ஆனால், உன்னோடு வாழ்ந்து இழந்த உறவுகளின் ஆன்மாவின் மோட்சக்கதவுகளைத் திறக்க, இயற்கையிடம் வேண்டிக்கொள்.

பாசத்தில் மிதந்தவனுக்குத் தான் இழப்பின் வேதனை புரியும் என்று, என்னை ஓர் பார்வை பார்க்கிறாயா? பார். பார்த்துச் சிந்தி.

உயிர்கள், உடல் நழுவிப் போனதும், 'ஆண்டாண்டு தோறும் அழுதழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ' மனமே! அதனால் தான் கூறுகிறேன். பயன் கிடைக்கா ஒன்றுக்காக உன்னை நீ இழக்காதே. உன் மனதைக் காக்க வேண்டியது உன் பொறுப்பு. உன் உயிர் உன்னுடலில் இருக்கும் வரை நீ வாழ வேண்டியவன். அதனால் உன் கவலைகளுக்கு நீயே எல்லையிடு. உன் மனதை நீயே பூசித்து மனமே மீண்டெழு.

**மலர் சின்னையா**

# பிஞ்சு முகத்தின் தேடல்

அக்கா! ... அக்கா! நான் இரண்டு முறை கூப்பிட்டும் பதிலில்லை. என்ன செய்கிறாள்?எனக்குக் கொஞ்சம் கோவம் வந்தது. மெல்லப் பூனை போல நடந்து அக்காவைத் தேடினேன். அவளை வீட்டுக்குள் காணவில்லை. வெளியே வந்தேன். கண்களைச் சுழற்றி எல்லாப் பக்கமும் தேடினேன். அம்மாவின் தலை தெரிந்தது. குனிந்து கிடுகு பின்னிக் கொண்டிருந்தாள். அதோ!.. கிணற்றடியில் ... அக்கா நிற்கிறாள் போலத் தெரிந்தது. அவளுடைய நீலப்பாவாடை கிணத்தடிச் செத்தையின் பெரிய துவாரத்துக்குள் பளிச்சென்று தெரிந்தது!...

நான் கிட்டப் போனபோது அக்கா தோய்க்கிற கல்லிலை இருந்து அழுது கொண்டிருந்தாள். ஏன் அழுகிறாள்?... அக்கா! ... நான் மெல்லக் கூப்பிட்டுக் கொண்டு பக்கத்தில் போனேன். அவள் சட்டென்று எழும்பிக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். ஏனக்கா அழுதனி? நான் கேட்ட போது, அக்கா சொன்ன பதில் என்னை அதிர வைத்தது. செத்தையிலை கறையான் தட்டினன் அது மண் கண்ணுக்கை விழுந்து போச்சு!.. செத்தையிலை கறையான் அப்படியே செம்மிக் கிடந்தது. அக்கா பொய் சொல்லுகிறாள். எனக்கு ஒரு ஆசை வந்தது... இப்ப அவள் பொய் சொன்னதைப் பற்றிக் கேளாமல் விட்டுப் பிடிப்பம். நான் யோசிக்க அக்கா... எழுந்து சரசரவென்று சாரைப்பாம்பு போல நழுவிவிட்டாள். அக்கா இருந்த இடத்தில்... ஒரு படம் கிடந்தது... எடுத்துப் பார்த்தன். ஓ! எங்கடை குடும்பப் படம். அப்பா இருந்தபோது எடுத்த படம். அதில் அக்காவுக்குப் பக்கத்தில் நான் முழுசிக்கொண்டு நிக்கின்றன்!.. என்ரை நினைவு சுழன்றது.

போன வருஷம் அப்பா தோட்டத்தாலை வந்து முகம் கழுவித் திருநீறு பூசிப் போட்டு தேத்தண்ணி குடிக்க... அம்மா சொன்னாள். எல்லாரும் பூங்கனிச் சோலையிலை போய் குடும்பமாப் படம் எடுக்கினம்!... நாங்களும் போய் எடுப்பமே!... நான் அப்பாவின்ரை முகத்தைப் பார்த்தன். தாடியும் மீசையுமா காடாக் கிடந்தது. அம்மாவின் தலையைப் பார்த்தன், பறட்டையாகக் கிடந்தது. அக்காவைப் பார்த்தன் இரட்டைப் பின்னல் போட்டு மடிச்சுக் கட்டி நல்ல ஒழுங்கா இருந்தது. என்ரை தலை! மான் கொம்பு போல இரண்டு சின்னக் கீரைப்பிடி.. எனக்கே சிரிப்பு வந்தது.

அப்பா சொன்னார்! கலியாணம் கட்டி 20 வருஷசமாச்சு இப்ப குடும்பப் படம் வேணுமெண்டுறாடியப்பா! எல்லாம் உந்தக் கண்ட பாவனையிலை கொண்டை முடிக்கிறது தானே! எனக்கு அப்பா சொன்னது அரைவாசிதான் விளங்கிச்சுது. அக்கா இப்ப... முன்னாலை வந்து அப்பாட்டைச் சொன்னாள். அப்பா எனக்கும் பல்கலைக்கழகம் போறதுக்கு படம் வேணும் அது எடுக்கும் போது, குடும்பமாகவும் ஒரு படம் எடுப்பம். அப்பா அக்காவின்ரை சொல்லுக்குச் சம்மதித்து விட்டார். அம்மாவின்ரை முகத்திலை மின்னல் மின்னிச்சுது. நான் துள்ளிக் குதிச்சன்.

அடுத்தநாள் படம் எடுக்க... காசுப் பிரச்சினை வந்திட்டுது. அப்பா எருவித்த காசு வந்து சேரவில்லை. அம்மா கிடுகு வித்தகாசும் வந்து சேரவில்லை. அன்றிரவு சாப்பிடும்போது அப்பா சொன்னார். நான் உங்களை ஏமாத்திப் போட்டன். இந்தக் கிழமையுக்கை காசு சேர்த்து எப்படியும் வாற கிழமை படம் எடுப்பம். அம்மா, நான், அக்கா மூண்டு பேரும் ஓயாமல் கிடுகு பின்னினம். அப்பா எல்லாவற்றையும் காய வைத்து அடுக்கி வைத்தார். அசுர வேகம்...! ஒரு கிழமையிலை 600 மட்டை கிடுகு.. பின்னியாச்சு அப்பா யாரையோ கூட்டி வந்து கிடுகு முழுவதையும் விலைபேசி விற்று விட்டார். பணம் கையில் வந்து விட்டது.

மறுநாள்! அப்பா முகத்தில் இருந்த காடு வெட்டப்பட்டு விட்டது. அம்மா எண்ணை பூசிக்கொண்டை போட்டாள். அக்கா நீலச்சேலை கட்டினாள். நான் கத்தரிப்பூ நிறப்பாவாடை சட்டை. எல்லாரும் வெளிக்கிட்டு பஸ்சிலை போய்.. பிறகு நடந்து போனம்! பின்நேரவெயிலில் படம் எடுத்தம். நான் கொஞ்சம் தலையை ஆட்டிப் போட்டன். அம்மா சீலைத் தலைப்பைச் செருக.. படம் பிடிப்பவர் மீண்டும் எங்களை ஒழுங்காக்கிப் படம் பிடித்தார். படம் 3 நாளில் தருவதாகச் சொன்னார். எனக்குக் கொஞ்சம் ஏமாற்றம் தான்!...

அன்றிரவு... சாப்பிடும்போது.. அப்பா இருமினார். அம்மா தலையில் தட்டித் தண்ணீர் கொடுத்தாள். ஆனால்.. அவர் தலை தொங்கிப் போச்சு! அம்மா குழறினாள். எல்லாம் முடிஞ்சு போச்சு!.. நானும் அக்காவும் திகைத்து நின்றோம். அம்மாவின் தமையன்! எங்கடை மாமா!.. பெரிய கல் வீட்டுக்காரரர்! வந்தார். அம்மாட்டை இருந்து காசை வேண்டி செத்தவீட்டை நடத்தினார்.



எட்டாம் நாள் செலவு அந்திரட்டி என்று செலவு காட்டி அம்மாவின்ரை தாலிக் கொடியையும் வாங்கிக் கொண்டு போய் விட்டார். அம்மா கிடுகு பின்னி எங்களுக்குச் சாப்பாடு போட்டாள்.

அக்கா பல்கலைக் கழகம் போக வேணும்! அவளுக்கு மருத்துவ பீடத்துக்கு அனுமதி கிடைத்திருந்தது.

ஆனால் அவள் எப்படிப் போவது? சாப்பாடு சாப்பிடுவதே பெரிய கஷ்டமாக இருந்தது.

ஆனால் அம்மா சொல்லிப் போட்ட ாள் பிள்ளை நீ படி! நான் எப்படியெண்டாலும் உன்னைப் படிப்பிக்க வேணும்.

அவற்றை ஆசையை நிறை வேற்ற வேண்டும். அக்கா அரை மனதோடை சம்மதிச்சாள்.

சென்றகிழமை தான் பல்கலைக் கழகத்திலை போய்ப் பதிவு செய்துவிட்டு வந்தாள். அவள் முகம் பயத்தில் வெளிறிக் கிடந்தது.

நான் அவளிடம் கேட்டபோது மழுப்பிவிட்டாள்.

ஆனால் அவளுக்கு ஏதோ சிக்கல் இருக்கு எண்டு எனக்கு விளங்கிச்சுது... முட்டை போட்ட கோழியின் கொக்கரிப்பு என் நினைவுச் சங்கிலியை அறுத்துவிட்டது!

எழும்பி வீட்டுக்குள் போனன். அம்மா அக்காவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். மேனை அவங்கள் வெருட்டிறாங்கள்எண்டு படிப்பை விட்டிடாதை. நீ படிச்சு முன்னுக்கு வந்தால் தான் எங்களைக் காப்பாத்தலாம்.

வாழ்க்கையிலை இவ்வளவு தூரம் வதைபட்டுப் போனம்.

இந்தப் பகிடிவதைக்கு அஞ்சிறதே. அம்மா வின் குரலில் இருந்த உறுதி .. எனக்கு வகுப்பிலை படிச்ச பாட்டு நினைவுக்கு வந்தது.


ரீச்சர் சொன்னது, கேட் டது. இப்ப அக்காட்டைச் சொல்;னன் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

அக்கா என் கைகளை எடுத்துப் பற்றி முத்தமிட, நான் குடும்பப் படத்தை அவளிடம் கொடுத்தேன்.

மனோன்மணி சண்முகதாஸ்

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

பெரும்பாலான பெண்கள் சமுதாயத்துக்குப் பயந்தவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பது ஒரு கணிப்பாக



அமைகிறது. இந்தப் பயம் என்பது அடிமனதில் இருந்துகொண்டு - பெண்களின் முன்னேற்றங்களுக்குத் தடை ஏற்படுத்தி வருகின்றதை நாங்கள் பார்க்கிறோம். சிலவகையான பயங்கள் இப்படி அமைகின்றன.

✪ அந்தப் பெண்ணுக்கு வயது 26. அவள் ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறாள். வீட்டுக்குப் போகும் வழியில் தெரிந்த ஒரு ஆணுடன் நின்று கதைக்கிறாள்.

அப்போது, அந்தவழியே பணி புரியும் ஒருவர் வருகிறார். அவரைக் கண்டதும் அவள் "ஐயோ" என்று நாக்கைக் கடிக்கிறாள். என்னவென்று விசாரித்தால், 'இந்த மனுசன் பார்த்துக்கொண்டு போகுது. நாளைக்கு வேலை செய்யிற இடம் முழுக்க ஏதாவது கதைக்கப்போகுது...'

✪ வேலைநேரத்துக்கு வராமல் தாமதமாக ஒரு பெண் வந்தாள். இப்போது சில நாட்களாய் ஏன் தாமதமாக வருகிறீர்கள் என்று நிர்வாகத்தினர் கேட்டார்கள். 'வழமையாக வீட்டில் எனது கணவர் வீட்டுவேலைகளில் ஒத்துழைப்பார். இப்போது கொஞ்ச நாட்களாய் நான்தான் தனியச் செய்கிறேன். அதனால் வேலைகூட. எப்படித்தான் முயன்றாலும்... தாமதமாகி விடுகிறது' என்றாள்.

'ஏன் உங்கள் கணவர் இப்பொழுது ஒத்துழைப்புத் தருவதில்லை. உங்களுக்குள் ஏதும் மனக்கசப்பா?...'

அவசரமாக அவள்- இல்லையில்லை... அவர் எப்போதும் என்னில் அன்புதான். அவருடைய அம்மா ஊரிலிருந்து வந்துநிற்கிறா. அவர் வீட்டு வேலை செய்தால் அவ ஏதும் நிணைப்பா. மூத்தமகன் தன் மனைவிக்கு ஒத்தாசை புரிவதைப் பார்த்து அவ அவரைப் "பெண்டாட்டி சொல் கேக்கிற கோழை" என்று சொல்லுவா. அதால அவ நிற்கிறபடியால் நான் அவரை வேலை செய்யக் கேக்கிறததில்லை... என்றாள்.

✪ 'எனக்கொரு பிரச்சினையக்கா உதவி செய்வீங்களோ?...' அவளின் முகத்தைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

'என்ன பிரச்சினை?...'

'என்னோட வேலை செய்யிற ஒருவர் என்னை விரும்புறார்... எனக்கு விருப்பம்...'

'உங்களுக்கு விருப்பமெண்டால்... பிரச்சினையில்லைத்தானே...'

'எங்கட அக்காவுக்கு முப்பத்தாறு வயது... அவ இருக்க நான் இப்படி ஒரு முடிவெடுக்கிறதை வீட்டார்கள் விரும்பாயினம். அக்காவுக்கும் ஒண்டும் சரிவருகுதில்லை... எனக்கு என்ர வாழ்க்கையை நினைக்கப் பயமாயிருக்கு... அக்கா மாதிரித்தான் நானும் இருக்கவேணுமோ தெரியாது...'

✪ 'என்ன விடியத்துவக்கம் ஒரு மாதிரி இருக்கிறீர்?...'

'ஒண்டுமில்லை...'

'பொய்... என்ன பிரச்சினை எண்டு சொல்லுமன்...'

'காலமை அக்கான்ர மகள் வந்து யாழ்ப்பாணத்திலை கலியாண வீட்டுக்குப் போறதுக்கெண்டு நகையள் கேட்டவள்... இவர் வேலைக்குப் போட்டார்... அவரிட்டக் கேக்காமக் குடுக்கேலாதுதானே. இல்லையெண்டு சொல்லிப்போட்டன்... மனசுக்குக் கவலையாக் கிடக்கு...'

'நகை ஆற்றை?...'

'என்ரை நகையள்தான்... எண்டாலும் இவரிட்டக் கேக்காமக் குடுக்கேலாது தானே...' (தொடரும்...)

ஆதிலட்சுமி சிவகுமார்

# அரசாங்கத்தின் அடாவடித்தனத்தை இனிமேலும் பொறுக்க மாட்டோம்

## பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கை

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் 4 போராளிகள் ஆகியோர் - பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான செயலை வன்மையாகக் கண்டிப்பதாக, பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசாங்கத்தின் அடாவடித்தனத்தை நாம் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது போராளிகள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் பெண் போராளிகளின் இடுப்புப்பட்டியைக் கழற்றச் சொல்வதும், பிரயாணங்களைத் தடுப்பதும், இடைநிறுத்துவதும் புதிய தொன்றல்ல.யுத்தநிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்ட நாளிலிருந்து நடைபெறும் ஒப்பந்த மீறல்களில் இதுவும் ஒன்றாகும்.

எமது தமிழீழ மக்களின் இயல்பு வாழ்க்கையை மையமாகக் கொண்டே இந்தச் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும், ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகும். செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய இதுவரை ஒன்றுமே நடைபெறவில்லை. 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள், 100 நாட்கள் என நாட் கணக்கில் அமையச்சரத்துக்கள் எழுதப்பட்டன. ஆனால் 3 வருடங்களாகியும் எமது மக்களது சொந்தக் குடியிருப்பு வீடுகள், காணிகள் என்பன இதுவரை கைவிடப்படாது உயர் பாதுகாப்பு வலயங்களாகவே உள்ளன. 20 வருடங்களுக்கு மேலாக அவர்கள் முகாம் வாழ்க்கையே வாழ்கின்றனர்.

நாம் இனியும் இந்த ஒப்பந்தத்தையோ, அரசையோ நம்பி ஏமாறுவதைத்தவிர - வேறொன்றும் நடைபெறப்போவதில்லை.

எமது எத்தனையோ போராளிகள் கடலிலும், தரையிலும் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எமது அயல் நாடுகளும், சர்வதேசமும் இப்படியான சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிப்பார்களேதவிர ஒன்றும் பேசமாட்டார்கள். எமது போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்து எதிரியானவனை வீழ்த்தி, அவன் மேலேறி இருக்கப் போகும் நேரத்தில் நாம் எப்படியாவது முப்பதாயிரம் இராணுவத்தினரையும் ஒரு வழியில் மீட்டெடுத்துக் கொடுக்கவேண்டும் எனக் குரல் கொடுத்தவர்கள் எமது அயல்நாட்டு முதலமைச்சர்கள்.

சுனாமி கடற்கொந்தளிப்புத் தாக்கத்தின்போதுகூட எம்மவர்களைக் கருத்திற்கொள்ளவில்லை. எமது வட-கிழக்கு மக்கள் சுனாமி அனர்த்தத்தால் நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்ட அன்று முதல் இன்று வரை எமது விடுதலைப் புலிப் போராளிகளே அவர்களைப் பராமரித்து, ஆதரவு கொடுத்து வரும் இந்தவேளையில் - காட்டு மிராண்டித்தனமாக அவர்களைப் படுகொலை செய்தது எங்களால் பொறுக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. எமது போராளிகள் ஒவ்வொருவரும் அரத்தமில்லாது சாவடைகின்றனர். இனியும் நாம் எமது போராளிகளை இப்படி இழக்க முடியாது.

எனவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகி, தேசியத் தலைவர் கூறியதற்கு அமைவாக நாம் எமது சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத்தவிர வேறு வழியில்லை என்பதை அரசாங்கத்துக்குக் கூறிவைக்கிறோம்.

எமது இளைய தலைமுறை இளைஞர்களே, யுவதிகளே எமது சகோதர போராளிகளை இனியும் அநியாயமாக இழக்கவிடாது, நாம் ஒவ்வொருவரும் போராட்டத்தில் இணைந்து, மாவீரர்களின் இலட்சியக் கனவான தமிழ்த் தாயகத்தை மீட்டெடுப்பதற்கு அணி திரண்டு ஒன்றுபட்டுப் போராடுவோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## சுனாமியால் உயிரிழந்த மக்களுக்கு இறப்புச் சான்றிதழ் பதிவுகள்

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்த மக்களுக்கான இறப்புச்சான்றுப் பதிவுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் இதுவரை 1026 இறப்புச்சான்றுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்தப் பிரதேசத்தின் பிறப்பு, இறப்புப் பதிவாளர் தெரிவித்தார்.

மேலும் இந்தப் பிரதேசத்தில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பதிவாளருடன் தொடர்பு கொண்டு பதிவுகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்குடியிருப்பு நலன்புரி முகாம்களில் தற்காலிக வீடுகள் அமைப்பு!

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு - புதுக்குடியிருப்பு பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகளில் கடந்த 6,7 ஆம் திகதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள உடையார்கட்டு மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலை, இரணைப்பாலை மகா வித்தியாலயம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களே பொக்கணை, வலைஞர்மடம், பனையடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட தற்காலிக வதிவிடங்களில் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சமையல் உபகரணங்கள், உணவுப் பொருட்கள் மற்றும் ஆயிரம் ரூபா பணம் என்பன தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைத்தீவு மாவட்ட பணிப்பாளர் தலைமையில் வழங்கப்பட்டன.

## யு.என்.டி.பி வேலைத்திட்டங்கள்; முல்லைத்தீவில் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

இந்த ஆண்டு யு.என்.டி.பி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் - வீடுகளை அமைத்துக்கொடுத்தல், கடற்தொழிலை அபிவிருத்தி செய்தல், விவசாயத்தை மேம்படுத்தல், உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் என்பன செய்து முடிப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், அதைச் செயற்படுத்துவதற்கான குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் அரசதிணைக்கள உத்தியோகத்தர்கள், கடற்தொழில் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் சுனாமி கடற்கொந்தளிப்பு பின் பின்னரான புனரமைப்புத் தொடர்பாக கூடியகவனம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வெலிக்கந்த கொலைச் சம்பவத்தைக் கண்டித்து நாளை வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி

(வவுனியா)

பொலநறுவை - மட்டக்களப்பு வீதியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான மட்டக்களப்பு அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு உட்பட ஐவரது கொலைக்கு கண்டனம் தெரிவித்தும், சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான நிவாரணங்கள் வழங்கப்படாததை ஆட்சேபித்தும் நாளை வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட வெகுசன ஒன்றியங்களின் தலைவர் ச.குலதேவராசா தலைமையில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட பேரணிகள் கண்டி வீதி, இறம்பைக்குளம், குருமன்காட்டுச் சந்தி ஆகிய நான்கு திசைகளில் ஆரம்பித்து மாவட்ட செயலகத்தில் ஒன்றுசேரும். அங்கு அரசாங்க அதிபரிடம் தமது மகஜரை சமர்ப்பித்த பின்னர் பேரணி வைரவப்புளியங்குளம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்று அங்கு முடிவடையும்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகள் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பேரணியல் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை 8 மணிக்கு பேரணி ஆரம்பித்து பகல் 12மணிக்கு முடிவடையும். இந்த நேரத்தில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு இருக்கும். அதன்பின்னர் வழமை போல் கடைகளை திறக்கலாம் என ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் உள்ள அனைத்து அமைப்புக்களும் இந்த பேரணிக்கு தங்களுடைய பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

## புதுக்குளம் - குழுமாட்டுச் சந்தி வீதி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில்

வவுனியா - புதுக்குளம் சந்தியில் இருந்து குழுமாட்டுச்சந்தி வரையான 3 கிலோ மீற்றர் தூரமான வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனால் இந்தப் பிரதேச மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி சேதமடைந்திருப்பதனால் இந்த வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தமது உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பலவித ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து இந்த வீதியைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### பெப்ரவரி 11

1649 : ஒக்ஸிஸன் இல்லாமலேயே சில நுண்ணுயிரிகள் உயிர்வாழ முடியும் என்பதை முதன் முதல் நிரூபித்துக்காட்டிய இத்தாலியைச் சேர்ந்த விஞ்ஞானி லாஸரோ ஸ்பால்லான்ஸானி மரணமடைந்தார்.

1800 : புகைப்படக் கலையின் தந்தை "வில்லியம் ஃபாக்ஸ் டால்பட்" என்பவர் பிறந்தநாள்.

1914 : தென்னாபிரிக்காவில் காந்தியடிகள் நடாத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தில்லையாடி வள்ளியம்மை மொனிஸ் பேர்க் சிறையிலிருந்து விடுதலையானார்.

1917 : முதன் முதலாக வானில் இரவு வேளையில் விமானச் சண்டை நடந்தது.

1964 : ஜப்பானின் செயற்கைக்கோளான "ஒசுமி" லாம்ப்டா - 5 என்னும் றொக்கட் மூலம் விண்வெளியில் செலுத்தப்பட்டது.

1979 : அந்தமான் சிறை இந்தியாவின் தேசிய சின்னமாக்கப்பட்டது.

1990 : கடந்த 30 வருடங்களாக அமுலில் இருந்த தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் மீதான தடை 1990 பெப்ரவரி 02 ஆம் திகதி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் தலைவர் நெல்சன் மண்டேலா 28 வருட சிறைவாசத்தின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

2004: ஐ.தே.கட்சி அரசின் 39 அமைச்சர்களின் பதவிகளையும் ஜனாதிபதி சந்திரிகா பறித்துக்கொண்டார்.

♦ ஈரான் தேசியதினம் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

## கௌசல்யன் உள்ளிட்ட மாவீரர்களுக்கு கிளிநொச்சியில் வீரவணக்க நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் மற்றும் போராளிகள் நினைவாக வீரவணக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு மாவீரர்களினதும், நாட்டுப்பற்றாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரநேரு, ஆகியோரின் வீரவணக்க நிகழ்வுகள், இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திலும், வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்திலும், அக்கராயன் இல1 பாடசாலையி லும், பளை மத்தியகல்லூரியிலும், பூநகரி வாடியடிபகுதி - தர்மபுரம் மகாவித்தியாலயத்திலும், முழங்காவில் மாவீரர் மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் செய்துள்ளனர்.

## வீதிப் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம்

அதிகரித்து வரும் வீதிவிபத்துககளை தடுக்கும் முகமாகத் தமிழீழ வீதிப் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, தமிழீழ நீதி நிர்வாகத் துறை சட்டவாக்கம் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திருத்தச் சட்டம் கடந்த 5 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே அனைவரும் போக்குவரத்துச் சமிஞைகளையும், போக்குவரத்து விதிகளையும் கவனத்திற்கொண்டு செயற்படுமாறு, தமிழீழ நீதி நிர்வாகத்துறை சட்டவாக்கச் செயலகத்தினர் கேட்டுள்ளனர்.

## கௌசல்யன் படுகொலையால் வவுனியா நகர் சோகத்தில்!

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட 6 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினால் வவுனியா நகரம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. வீதியோரங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகளும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

முச்சக்கர வண்டிகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. மணிக்கூட்டு சந்திகளிலும் ஏனைய முக்கிய சந்திகளிலும் அனுதாப பதாதைகள் கட்டப்பட்டு, சோக இசை ஒலிக்க விடப்பட்டுள்ளன. இன்று துக்க நாளாகக் கடைப்பிடிக்குமாறு, வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் மக்களைக் கேட்டுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

திருக்குறள்

# நமது நோக்கு

## ஐ.நா. சபை செயலரின் கண்டனமும் அது சுட்டிக்காட்டும் செய்திகளும்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - நாட்டுப் பற்றாளர் சந்திரநேரு உட்பட ஆறு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நாடளாவியரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சமாதானத்துக்கு ஆதரவான சக்திகளிடமிருந்து கடுமையான கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளமையானது, இதன் பின்னணியில் இயங்கிய துரோக சக்திகள் அனைத்துக்கும் அச்சம்தரும் ஒன்றாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

குறிப்பாக இந்தக் காட்டுமிராண்டித்தனமானதும், கோழைத்தனமானதுமான படுகொலைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் அவர்கள் கடுமையாகக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளமையானது - ஒட்டு மொத்த உலகமும் இந்த அராஜகத்தைக் கண்டித்ததற்கு சமமாகவே உள்ளதெனலாம்.

"இந்தக் கொலைகள் கண்டனத்திற்குரியவை... இந்தச் சந்தர்ப்பத்தில் சகல கட்சியினரும் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு அமைதி காக்கவேண்டும். யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கோ, அமைதி முயற்சிகளுக்கோ சீர்குலைவை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்" என அனான் அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கண்டனமும், அறிவுறுத்தலும் அரசை நோக்கிக் கூறியதாகவே எண்ணத் தோன்றுகிறது.

உண்மையில் புதிய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அமைந்தது முதலே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிப்போனதுடன், போர்நிறுத்த உடன்படிக்கைக்கான அச்சுறுத்தலும் அதிகரிக்கத் தொடங்கியது என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகள் யாவுமே சமாதான முயற்சிகளை முற்றுமுழுதாக, பகிரங்கமாக எதிர்த்து, பரவலான பிரசாரங்களை மேற்கொண்டு, இந்த நாட்டில் மீண்டும் இனவாதச் சிந்தனையை பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியில் ஆழவேரூன்றச் செய்தவர்கள். அந்த இனவெறி அரசியலையே தளமாக்கி இன்றைய ஆட்சியை அமைத்துள்ளார்கள் என்பதை அவர்களின் கடந்த பத்து மாத கால ஆட்சியின் செயற்பாடுகள் உறுதியாக நிரூபித்துமுள்ளன.

இந்தப் பத்து மாத கால ஆட்சியில் - அரசும், ஜனாதிபதியும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான நகர்வையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்பதுடன், அமைதிச் சூழலை சீர்குலைய வைக்கும் - மீண்டும் ஓர் போர்ச்சூழலை உருவாக்கும் உள்நோக்குடனான மூலோபாயத்துடன் கூடிய செயற்பாடுகளிலேயே முனைப்புடன் இயங்கினர் என்பதும் வெளிப்படையான உண்மையாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பிரதான பங்காளிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சகல தரப்பினரையும் அரவணைத்து வைத்துக்கொண்டு, அவர்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை சினமேற்றி மீண்டும் அவர்களை போர்கோலம் கொள்ளவைக்கும் திட்டங்களில் அரச தரப்பினர் எப்படியெல்லாம் இயங்கிவந்துள்ளனர் என்பதும் எல்லோரும் அறிந்த விடயமாகும்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் கிழக்கில் கருணா என்பவரால் மேற்கொள்ளப்பட்ட துரோகத்தனமான செயற்பாடுகளுக்குப் பின்னணி ஆதரவுச் சக்தியாக விளங்கி, அவருக்கும் அவரது கும்பலுக்குமான பாதுகாப்பை வழங்கி அவரைக் கைப்பொம்மையாக வைத்துக்கொண்டு பிரதேச வாதத்தைத் தூண்டி, தமிழ் பேசும் மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணும் விதத்தில் விடுதலைப் புலிகளிடையே பிளவை உண்டுபண்ணும் சதிநோக்குடன் இன்றைய அரசு எப்படியெல்லாம் செயற்பட்டது என்பதையும் விளக்க வேண்டியதில்லை.

கிழக்கில் கடந்த பத்து மாத காலப்பகுதியில் நடைபெற்ற சகல அராஜகங்களுக்கும், படுகொலைகளுக்கும் அரச படையுடன் - குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அவர்களின் நெறிப்படுத்தலில் இயங்கும் துணைப் படையென்ற கைக்கூலிகளே காரணம் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, வெலிக்கந்த படுகொலைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தினரதும், ஏனைய மக்கள் அமைப்புக்களதும் கண்டனங்கள் யாவும் அரசுக்கும், அரச படையினருக்கும், அவர்களின் கைக்கூலிக் கும்பல்களுக்கும் உரியதாக உள்ளதென்றே கூறவேண்டும்.

இந்தக் கொலைகளை அரசு, தானும் கண்டிப்பதாக அறிக்கை விடுத்தாலும் கூட, இதனை நம்பும் நிலையில் சமாதானத்தையும், அமைதியையும் நேசிக்கும் சக்திகள் இல்லையென்பதை ஆட்சித் தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்.

சர்வதேச சமூக்தின் கண்டனங்களும், அறிக்கைகளும் யாரோ ஒரு தரப்பை நோக்கியே விரல் சுட்டிக் குற்றம் சாட்டுகின்றன என்பது தெளிவான விடயமாகும்.

அந்தத் தரப்பு யார் என்னையும் அவர்கள் இனங்கண்டு கொண்டே இதனைத் தெரிவித்துமுள்ளனர்.

குறுகுறுக்கும் மனமுடைய கோழைத்தனமிக்க குற்றவாளிகளுக்கும், தேசவிரோத - தமிழின விரோத - சமாதான விரோத சக்திகளுக்கும் அது கனகச்சிதமாக பொருத்தமாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நேருவின் வாகனத்தில் கௌசல்யன் பயணித்தது கொலைஞர்களுக்கு தெரிந்தது எப்படி?

அரசாங்கத்துக்கு நல்லவர்களாகவும், ஆயுதப்படைகளுக்கு உதவியவர்களாகவும் பாராட்டுப் பெறுவதைத்தவிர வேறு எந்தப் பயனையும் லெப்.கேணல் கௌசல்யனையும், அவரோடு சென்றவர்களையும் கொலை செய்தவர்கள் பெற்றதில்லை என்று சொன்னபடியே வந்தமர்ந்தார் பரமசிவம்.

கிழக்கு மாகாணமே சோகத்திலாழ்ந்திருப்பதும், இஸ்லாமிய மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் கடையடைப்பு, ஹர்த்தாலில் இணைந்து தமது துக்கத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இது அவர்கள் மீது மக்கள் வைத்திரு ந்த நம்பிக்கையின் வெளிப்பாடுதானே என்றேன்.

கொல்லப்பட்டவர்கள் மீது மக்கள் வைத்திருந்த அன்புக்கும், பாசத்துக்கும், மரியாதைக்கும், நம்பிக்கைக்கும் மட்டுமல்லாமல் - இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் மீது காட்டும் வெறுப்புக்கும் அடையாளமாக இதை எடுத்துக் கொள்ளலாம். கடற்கோள் அனர்த்தத்தால் எல்லாவற்றையும் இழந்து அனாதைகளாய் கிழக்கு மக்கள் நின்றபோது விடுதலைப்புலிப் போராளிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உடனடியாக ஓடிச் சென்று உதவியளித்தன. இச்சமயத்தில் கௌசல்யன் ஆற்றிய பணிகளை அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் கூடப் பாராட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்தவர்களை எந்தக் காரணமுமில்லாமல் கொலை செய்தவர்களுக்கு எந்தவிதத்தில் வெறுப்பை யும், எதிர்ப்பையும் காட்டமுடியும்.

மரணமானவர்களுக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், கொலைகாரர் மீதான தமது எதிர்ப்பையும், வெறுப்பையும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டு காட்டியிருக்கிறார்கள். கோடரிக் காம்பின் பெயரைச் சொல்லி அந்தக் குழுவின் செயல்தான் இது என்று அப்படி ஒரு குழு இருப்பதாகக் காட்டி, அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில் கொழும்பு ஊடகங்களும் அரச தரப்பினரும், படைத்தரப்பினரும் முயல்கின்றனர்.

இப்படியொரு குழு இருப்பதாகப் படைத்தரப்பும், அரசதரப்பும் கூறுவதில் உண்மையிருந்தால் இதுவரை அரச புலனாய்வுத் துறையினர் ஏன் கண்டுபிடிக்காதிருக்கின்றனர். இவர்களைக் கண்டுபிடிக்கும் திறன் அரச புலனாய்வுத்துறைக்கு இல்லையா? அரச புலனாய்வுத்துறையே இக்குழுவுடன் சங்கமமாகியிருக்கிறதா? அரச புலனாய்வுத் துறையின் ஒரு பிரிவுதான் இந்தக் குழுவா? இப்படிப்பல சந்தேகங்கள் மக்கள் மனதில் எழும்பியிருக்கிறது என்றார் பரமசிவம். கௌசல்யனைக் கொலை செய்தவர்கள் இதற்குத் தெரிந்தெடுத்த நேரமும், இடமும் தவறானது என்று அரசியல் இராணுவ ஆய்வாளர் தராகி ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறாரே பார்த்தீரா? என்றேன் நான்.

பார்த்தேன், பார்த்தேன். சுனாமிப் பேரழிவினால் ஏற்பட்ட இழப்புக்களுக்காக மக்கள் இன்னமும் அழுது ஓயவில்லை. இந்த நேரத்தில் எல்லோரும் தங்களுக்கிடையேயுள்ள அரசியல் வேறுபாடுகளை மறந்து, குரோதங்களை விடுத்து , கட்சி பேதங்களைத் துறந்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து பொது நன்மைக்காக அதாவது சுனாமி பேரழிவால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டு நிமிரும்வரையாவது ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்று மக்கள் நினைக்கின்றார்கள், விரும்புகிறார்கள். இந்தச் சமயத்தில் இக்கொலைகள் நடந்திருக்கக்கூடாது. கிரானில் கௌசல்யன் கொல்லப்பட்டிருந்தால் அதுவேறு கதை. அவர்கள் கொல்லப்பட்ட வெலிக்கந்த -புனானைப் பகுதி இராணுவத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதி என்பதுடன் பொலநறுவையின் எல்லையிலுமுள்ளது.

அது சரி முன்னாள் எம்.பி. சந்திரநேருவின் மோட்டார் வானில் கௌசல்யன் பயணஞ்செய்துகொண்டிருக்கிறார் என்று கொலைகாரர்களுக்கு எப்படி தகவல் கிடைத்தது. இராணுவச் சோதனைச் சாவடிகளிலிருந்துதான் இந்தத் தகவல் கிடைத்திருக்கவேண்டுமென்கிறார் தராகி. இதில் உண்மையில்லாமல் இருக்கமுடியாது என்றார் பரமசிவம்.

படைத்தரப்பினருக்கும், கோடரிக்காம்புகள் என்று சொல்லி இயங்குபவர்களுக்கும் தொடர்பிருக்கவேண்டும், அல்லது இரண்டும் ஒன்றாக இருக்கவேண்டும் என்பதுதான் இப்போது நிரூபிக்கப்பட்டுவருகிறதென்று பரமசிவம் மேலும் சொன்னார். கௌசல்யன் கொலைக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் கடும் கண்டனம் தெரிவித்துச் செய்தி வெளியிட்டிருக்கிறாரே பார்த்தீரா என்று பரமசிவம் கேட்டார்.

பார்த்தேன். இலங்கைக்கு வந்து போனவர். தமிழர் தாயகப் பகுதிக்குப் போய்ப் பார்க்காமல் தடுக்கப்பட்டவர், தாயகப் பகுதியில் நடைபெறும் நிகழ்வுகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளையும் கேள்விப்பட்டவர். கிழக்கில் விடுதலைப் புலிப் போராளிகள் உடனடியாக ஓடிச் சென்று அளித்த உதவிகளையும் விசாரித்தறிந்தவர். ஐ.நா. சார்பு அதிகாரிகள் கௌசல்யன் பணிபற்றியும் சொல்லியிருப்பார்கள். கொலை பற்றிக் கேள்விப்பட்டவுடன் அதைக் கண்டித்துச் செய்தி வெளியிட்டிருக்கிறார். வாஜ்பாய் மாதிரி இலங்கையின் வடபகுதிக்குச் சென்று வெளியேறியதும் மறந்துவிடக்கூடியவரா கொபி அனான் என்றேன்.

ஐ.நா.செயலாளர் நாயகம் இக் கொலையைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கை – அரசுக்கும் பேரினவாதிகளுக்கும் ஏன் நம்மவர் சிலருக்கும் கூடக் கொஞ்சம் மனதில் சிறிது சங்கடத்தை ஏற்படுத்தமாட்டாதா என்று கேட்டார் பரமசிவம். அவர்களுக்கு ஒருமாதிரியாகத்தான் இருக்கும். வெளிநாடுகளில் புலிகளைப்பற்றி அவதூறுப் பிரசாரம் செய்வதையே முக்கிய தொழிலாகக் கொண்டிருப்பவர்களுக்கும், அவை சார்ந்த ஊடகங்களுக்கும் உலக அனுதாபம் கிடைப்பதை எப்படிப் பொறுக்கமுடியும் என்றேன்.

அதுசரி நீர் யாழ்.போதனா வைத்தியசாலையைப் பற்றி ஏதோ வெகுவாகப் பாராட்டி எழுதியிருக்கின்றீரே. நான் பெற்ற அனுபவம் ஒன்றைச் சொல்லட்டுமா? என்று கேட்டார் பரமசிவம்.

நான்பெற்ற அனுபவத்தையும், கண்ணால் பார்த்ததையும்தான் எழுதியிருந்தேன். பொய் எழுதவில்லை; புளுகவில்லை; எனக்குப் புளுகத் தெரியாது. நீர் உமது அனுபவத்தைச் சொல்லும் என்றேன்.

வார்டிலிருந்து வெளியேறும்போதே மருத்துவர்கள் மருந்துகள் எழுதிக்கொடுக்கிறார்கள். இவை ஒரு சிறிய கொப்பியில் எழுதிக் கொடுக்கப்படுகின்றன. இந்த மருந்துகளைப் பெறுவதற்குக் காலையிலிருந்து மாலைவரை நீண்ட "கியூ" வரிசையில் காத்திருக்கவேண்டும். மருந்து கொடுப்பவர்கள் சுறுசுறுப்பாகச் செயற்படுகிறார்கள்தான். பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் பாவித்து, பழைய பேப்பர்காரர்களுக்கு விற்ற அப்பியாசக் கொப்பிகளில் கிழித்த தாள்களில் மருந்துகளைச் சுருட்டி, அதில் எழுதப்படாத ஒரு இடத்தில் 3 வேளை, 2 வேளை என்று எழுதிக் கொடுக்கின்றார்கள்.

இந்தச் சரைகள் கையில் வந்தவுடன் வாய்பிளந்துவிடுகின்றன. தனித்தனியே தரும் மருந்துச் சரைகள் ஒன்றோடொன்று கலந்து எல்லாம் சங்கமமாகிவிடுகின்றன. குளிசையின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்றதாவென்று குளிசையைப் பார்த்தால் அது அரசாங்க வைத்திய சேவையைக் குறிக்கும் எழுத்துக்களே பொறிக்கப்பட்டிருக்கின்றன. மருந்துகளின் பெயர் இல்லை.

தனியார் மருந்துக் கடைகளில் அல்லது தனியார் வைத்திய நிலையத்தில் மருந்துகளின் பெயர், பாவிக்கும் முறை எழுதி ஒரு உறையில் போட்டுக் கொடுப்பார்கள் என்றார் பரமசிவம்.

அரசினர் ஆஸ்பத்திரிகளில் இப்படிச் செய்வதாக இருந்தால் அதிகாரிகளுக்கிடையில் இது பற்றிக் கடிதப் போக்குவரத்து நடந்து உயர் அதிகாரி இதுபற்றி முடிவுசெய்து அறிவிப்பதற்கிடையில் – தாள்களும் செலவாகி, நேரமும் செலவாகிவிடும் என்றேன். என்றாலும் எத்தனையோ பொது அமைப்புக்கள் இருக்கின்றன. மருந்துகள் உரியவர்களுக்கு உரிய முறையில் கிடைப்பதற்கு உதவி செய்ய முடியாதா? என்று கேட்டேன்.

யாராவது நல்லவர் காதில் இது விழுந்தால் நல்லதுதான், பயன் தரலாம் என்றுசொல்லிக்கொண்டே எழுந்தார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## இந்த நிலையில் பகிடிவதை தேவைதானா?

அண்மைக்காலமாக யாழ்.குடாநாடு கல்வியில் பெரும் வீழ்ச்சியடைந்த நிலையிலேயே இருந்து வருகிறது. இதற்குச் சான்றாக அண்மைக்கால உயர்தர பரீட்சை முடிவுகளைப் பார்க்கும்போது தெரிந்து கொள்ளலாம். இத்தகைய ஓர் நிலைமை தொடர்ச்சியாக இருந்துவந்தால் எமது எதிர்கால சந்ததியின் நிலை என்னவாகும் என்பதை கல்விமான்களும், புத்திஜீவிகளும் சிந்திக்கவேண்டும்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் சித்தியடைந்து உயர்கல்வி கற்பதற்காய் பல்கலைக்கழகம் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று கல்வியைத் தொடர்வதற்கு அச்சமடைகின்ற நிலையே இன்று பல்கலைக்கழக சூழலில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

அண்மையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான புகுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதை என்ற அநாகரிகமான செயற்பாட்டைப் புரிந்துவருகின்றனர். இதனால் புகுமுக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து கற்பதற்கு குழப்பமான நிலையை சிரேஷ்ட மாணவர்கள் ஏற்படுத்துவதாக அறிகின்றோம்.

புகுமுக மாணவர்கள் சிலர் உடல் ரீதியான பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். இதேவேளை சில மாணவர்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் மனநிலை குழப்பமடைந்த நிலையில் இருக்கின்றனர். இன்றைய சூழ்நிலையில் இத்தகைய செயற்பாடுகளை எப்படி பொறுத்துக்கொள்ளமுடியும்? புகுமுக மாணவர்களிடம் பகிடிவதை புரிவோர் மீது பல்கலைக்கழக நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்தபோதும், இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கிறது.

இந்த நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க பல்கலைக்கழக சமூகம் முன்வரவேண்டும். இன்று எமது இனம், மொழி ஒடுக்கப்பட்டிருக்கின்ற, தொடர்ச்சியாக எம்மினம் மீது வன்முறைகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் - கல்வியில் உயர்ந்த எதிர்கால சமூகத்தை உருவாக்கவேண்டும் என நினைத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் இன்று எமது இனத்துக்குப் பகிடிவதை தேவைதானா?

புத்தூர் அருள்

பகுதி XXXV — சங்கர்

இவ்வாறு கூறிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதவரிடம் விடைபெற்று வந்தேன். தனது தாயையும், தந் தையையும் இழந்த ஒருவரைச் சந் தித்தேன். அவருடனான உரையா டல் இது -

'உங்கட பேர் என்ன'?

'எண்ட பேர் ராஜேந்திரன் வயசு 34'.

உங்கட குடும்பத்தில செத்தாக் கள் பேரென்ன?

அப்பா காளி, அம்மா இராசம்மா ரெண்டு பேரும்'.

இவங்க ரெண்டு பேரும் அம் பிட, நீங்கள் எப்பிடித் தப்பினீங்கள்?

நாங்க அண்டைக்கு கடலுக்கு போகல்ல. அம்மாக்கள் வள்ளம் இழுக்கப் போனவங்க. வள்ளம் இழுக்கப் போன இடத்ததான் அம் மாவும், அப்பாவும் இறந்தாங்க.

நீங்கள் எங்க நிண்டனீங்கள்?

நான் றோட்டுக்கு மற்றப் பக்கம். அந்த நேரம் கடலுக்குப் போன்வங் கள் கடல் பெருகி வருகுது ஓடுங்க எண்டு சொன்னாங்க. எனக்கிட்ட ரெண்டு பிள்ளைகள் இருந்தது. பிள்ளைகளையும் கொண்டு நான் ஆத்தங்கரைக்கு ஓடிட்டன்.

வேற என்ன வகையில் உங்க ளுக்கு இழப்பு?

இந்த ஊரில கன படகுகள் சேதமாயிருக்கு. ஒண்டு - ரெண்டு தான் தப்பியிருக்கு. மற்ற எல்லாம் போட்டும், தோணியும் உடைஞ்சு தூளாயிருக்கு. வலை ஒண்டுமே இல்ல ஆக்களிட்ட. ஒருத்தரிட்ட யுமே வலை இல்லை, அதுதான் நாங்க இங்க தொழிலுக்கும் போகாம இருக்கம்.

ஆராவது போட், வலைக்கு உதவி செய்யுறதா சொன்னதா?

அரசாங்கம் செய்யுமெண்டு சொல்றாங்கள். ஆனா இன்னும் ஒருத்தரும் நாங்கதான் உதவி செய்யப் போறமெண்டு எங்களிட்ட சொல்லல்ல.

அடுத்து தனது மாமனாரை அலைக்குப் பறிகொடுத்த ஒரு பெண்மணியுடனான உரையாடல்-

'நாங்க கடல்ல இருந்து அலை வரக்கை பாத்துண்டிருந்தப்போட்டு தண்ணிக்க அம்புட்டு, கிருமிச்சைக்க ஓடியிருந்தம். மாறா ஆலங்குளத் தில அகதியா இருந்தம். மாறா அங் கையும் சாமான் தந்து இப்பையும் இஞ்ச கொண்டந்து அகதியா விட் டிருக்காங்க. பாக் கொலனிப்பக்கம் இங்க சாப்பாட்டுக்கும் பிரச்சினை யில்ல; கொச்சிக்காய், வெங்காயம் சாமான் இல்ல, உழைப்பில்லை. நாங்க வள்ளம் இழுத்துத்தான் சீவிச்சிட்டிருந்தனாங்கள். இப்ப எங் களுக்கு எல்லாம் கஷ்டமாகத்தான் இருக்கு.

இந்த அலையில எங்கட மாமா சின்னமணியெண்டு - வயது போன வர்தான். 55 வயது இருக்கும். போயிட்டாரு'

'அவர் என்ன தொழில் செய்யி றவர்?'

'அவர் கடலுக்குப் போயி கூலித் தொழில்தான் செய்தவரு'

மாவடி ஓடையில் இருந்தவரு. அங்கையிருந்து வாடி கட்டிக் கொண்டு இருக்கேக்க, பிள்ளைகள் அலை வருகுது எண்டு சொல் லேக்க அவர் அத கவனிக்கேல்ல.

மாறா கவனிச்சுப்போட்டு மரத் தில ஏறியிருக்காரு. அலை வந்து போக மரத்தில இருந்து இறங்கிருக் காரு. மாறா ரெண்டாவது அலை யோட போயிட்டாரு. மாறா பொடியை எடுத்து வாழைச்சேனை ஆஸ்பத் திரியில பாரம் குடுத்து பொலிஸ் வந்து பாரமெடுத்து புதைச்சாங்க'

'நீங்கள் எப்படித் தப்பினீங்கள்?'

நாங்கள் ஓமன புள்ளக எல் லாம் எடுத்துட்டுத்தான் ஓடின. ரெண்டு புள்ளகளும் நானும் அலை யில அம்பிட்டுத்தான் ஓடினாங்க. மத்த மூணு பிள்ளகளும் ஓடித்து.

'உங்களுக்கு என்ன பேர்?'

'சின்னத்தம்பி போஸ்பதி'

'போஸ்பதியா? என்ன வயசு?'

'ஓ போஸ்பதிதான். வயது 32'

'அப்ப உங்கட அவர்...?'

'அவர் விட்டுத்துப் போய் மூணு வருஷம். அம்மாடதான் இருந்த னான். வீடெல்லாம் கல் வீடுதான். எல்லாம் உடைஞ்சித்து. ஒரு சாமா னும் எடுக்கல்ல நாங்கள். நகை, சாமான் எல்லாம் போயித்து.

இவருடனான உரையாடலை முடித்த பின் அங்கிருந்த சமுர்த்தி அலுவலர் சிவானந்தராஜா என்பவ ரைச் சந்தித்தேன். அவருடைய உரையாடல் இது- (தொடரும்)

# காற்றே நீ எம் கதை கேளாயோ...
# அலையே நீ எம் நிலை உணராயோ...

# இந்த வார பலன்
## 11-02-2005 - 17-02-2005

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| சந் யுரே | 11 காலை 11.07 மீனசந்<br>12 இரவு 7-13 கும் - சூ<br>13 பக 1.06 கும் - புத<br>13 மா 3-14 மே - சந்<br>15 இ 11-28 இட - சந் | | |
| சூ புத சுக் நெப் | | | |
| | | கேது | குரு |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்த வர்களுக்கு குரு 6 இல் சஞ்சரிப்பதால், குடும்ப வாழ்க்கை யில் பல சிரமங்கள் தோன்றும். பண விடயத்தில் வருவாய் இருப்பினும் செலவு அதற்கு மேலாகச் செல்லும். தேகசுகம் குடும்ப சுகம் இடையிடையே பாதிக் கப்படலாம். வழிபாடுகள் மனத் திருப்தி தரும். திருமணப் பேச்சுக் கள் சற்று தாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். நன்மாற்றங்கள் கிடைப்பது கடினம். வர்த்தகர்கள் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நன்று. வியாபாரத்தில் வருவாய் குறைவாகவே இருக்கும். மாணவர் கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். நண்பர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனன மானவர்களுக்கு குருவின் பார்வை யால் பல நற்பலன் கள் கிட்டும். இல் வாழ்க்கையில் மகிழ் ச்சி, நிம்மதி என்பன நிலவும். பொருளாதாரம் சிறப்படையும். தேக சுகம் நன்றாக இருக்கும். நற்பலன் கள் நடைபெற இடமுண்டு. திரும ணப் பேச்சுக்கள் நல்ல பலனைத் தரும். தொழில் முயற்சிகளில் ஊக்க மும், சுறுசுறுப்பும் காணப்படும். உத் தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் மத்தியில் பாராட்டும், மதிப்பும் கிட் டும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக அமையும். சொந்த தொழில்கள் கூடிய நன்மை பயக்கும். மாணவர்களுக்கு கல்வி யில் நற்பலன் உண்டு.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசிக்காரர் களுக்கு ஏழரைச் சனியின் தாக்கம் இருப்பதால், வாழ்க் கையில் அவ்வப் போது மனக்கஷ் டங்கள் தோன் றும். குடும்பத்தில் நிம்மதி குறை யும். தொழில் கடினமாக இருக்கும். பணவருவாய் ஓரளவு இருக்கும். எனினும் சிக்கனத்தைக் கடைப்பிடித் தல் நன்று. பொதுவாகத் தொடங் கிய கருமங்கள் நிறைவேறுவதில் தடை, தாமதங்கள் காட்டும். திருமணப் பேச்சுக்களில் இழுபறி நிலை தோன்றும். உத்தியோகத் தர்களுக்கு வேலைப்பளு அதிகமா கும். காரியாலயத்தில் மதிப்பு இருக் கும். ஆயினும் சக உதவிகள் கிடைப் பது கஷ்டம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடந்தாலும், பணம் சேருவது கடினம். கொடுக் கல் வாங்கல்களில் நிதானம் தேவை. மாணவர்கள் முயற்சிக் கேற்ப பெறுபேறுகளையடைவர்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடக ராசியில் பிறந் தவர்களுக்கு இல் வாழ்வு நன்றாக அமையும். புரிந்து ணர்வு ஏற்படும். முன்பிருந்த பணக் கஷ்டங்கள் குறை யும். வருவாய் ஓரளவு நன்று. தொடங்கும் கருமங்கள் அதிக கஷ்ட மில்லாமல் நிறைவு பெறும். குடும் பப் பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவர். தேகசுகம் பாதிக் காது. திருமணப் பேச்சுக்கள் சற் றுக் காலந்தாழ்த்தி நடக்கும். உத் தியோகத்தர்களுக்கு அரசு உத விகள் கிட்டும். வசதியான இடமாற் றங்கள் கிடைக்கும். வர்த்தகர் ளுக்கு வியாபாரம் நன்றாக நடக் கும். பணவருவாய் கிட்டும். புதிய முதலீடுகளுக்கு ஏற்ற காலமில்லை. மாணவர்களுக்கு கல்வி முன்னேற் றம் உண்டு.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்க ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ் ச்சியும், அமைதி நிலையும் காணப் படும். இனத்தவர் களுடன் கொண் டாட்டங்கள் அதி கமாகும். எண்ணிய கருமங்கள் எண்ணியபடி கைகூடும். குடும்பப் பெண்கள் உற்சாகத்துடன் காணப் படுவர். பணவருவாய் திருப்திகரமாக அமையும். திருமணத்தை எதிர் நோக்குவோருக்கு கருமம் கை கூடும். உத்தியோகத்தர்களுக்கு மக்கள் மத்தியில் நற்பெயர் கிட்டும். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். தனித் தொழில் செய்வோருக்கு தொழிலை விரிவுபடுத்த வாய்ப்புக் கள் கிட்டும். ஆடம்பரப் பொருட் களை விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்கள் கல்வி யில் ஊக்கம் காண்பர். சிலருக்கு தொழில் வாய்ப்புண்டு.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசிக்கார ருக்கு ஜென்ம வியாழன் நடப்ப தால், குடும்பத் தில் சிறு சச்ச ரவுகள் தோன்றி மறையும், வேலைப்பளு, நிம்மதி யின்மை, அலைச்சல் என்பன ஏற் பட்ட வண்ணமிருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். பண வருவாய் சுமாராக இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதம் காணும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதம் ஆகும். உத்தியோ கத்தர்களுக்கு வேலைப்பளு அதி கரிக்கும். அதிகாரிகள் ஏறுமாறாக நடப்பர். வர்த்தகர்களுக்கு ஓரளவு இலாபம் கிட்டும். பணியாட்கள் ஒத் துழைப்பில் இழுபறி இருக்கும். மாண வர்களுக்கு கல்வியில் கடின முயற்சி வேண்டும். தேவையில்லாத விடயங் களில் தலையிடுவதைத் தவிர்க்க வும்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை யில் சில கருத்து வேறுபாடுகள் இரு க்கக்கூடும். எனி னும் குடும்ப ஒற்றுமை அதிகம் பாதிக் காது. எடுத்த கருமங்கள் கைகூடு வதில் தாமதம் காட்டும். செலவு கள் அதிகமாகும். தெய்வ நம்பிக்கை மன உறுதியைக் கொடுக்கும். திரு மணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் காணும். உத்தியோகத்தர் களுக்கு அதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். சக உதவிகள் குறையும். வர்த்தகர்களுக்கு நிதிநிலை நெருக் கடியைத்தரும். எதிர்பாராத செலவு கள் தோன்றும். தனித் தொழில் செய்பவர்களுக்கு நிதி நெருக்கடி காணும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறையும். விளையாட்டுக ளில் ஆர்வம் கூடும்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*




விருச்சிக ராசிக்காரருக்கு இல்லறத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் உதவி கிட்டும். தொடங்கும் கரு மங்கள் யாவும் தங்கு தடையின்றி நிறைவுபெறும். தேகாரோக்கியம் நன்று. பணவருவாய் திருப்தியாக இருக்கும். திருமண நிகழ்வுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத் தர்களுக்கு சம்பள உயர்வு, பழைய பாக்கி என்பன வந்து சேரும். அதி காரிகளின் அனுசரணை உண்டு.

வர்த்தகர்களுக்கு முதலீடுசெய்ய போதிய பணம் கிடைக்கும். வியா பாரம் சிறக்கும்.

தனித் தொழில புரிவோர் முன் னேற்றம் காண்பர். மாணவர்கள் கல்வியில் சிறப்பான பலன் காண்பர். சிலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக் கும்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனு ராசியின ருக்கு 10 இல் வியாழனும் 7 இல் சனியும் நடக் கிறது. குடும்ப வாழ்வில் பல சிக் கல்களைத் தாண்ட வேண்டியிருக் கும். கணவன் மனைவியிடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். பண வரவிலும் பார்க்க, செலவு கூடுதலா கக் காட்டும். கருமங்களில் அலைச் சல் கூடும். விவாகப் பேச்சுக்கள் காலவரையறையின்றி இழுபடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவல கங்களில் பல தொல்லைகள் ஏற் படும். அதிகாரிகளும் கடிந்து கொள் வர். தனித் தொழில் புரிவோர் பல சிரமங்களை எதிர்நோக்குவர். மாண வர்கள் கல்வியில் முன்னேற்றம் காண் பது கடினம்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசியில் பிறந்தவர்களுக்கு குருவின் பார்வை சிறப்பாக இருப்ப தால், குடும்ப உற வுகள் சுமுகமாக இருக்கும். நினை த்த கருமங்கள் நினைத்தவாறு நிறைவுபெறும். பொருளாதார நிலை மேலோங்கும். திடீர் பணவரவு ஏற்படலாம். வெளி நாட்டிலிருந்து நற்செய்தி கிடைக் கும். இல்லத்தில் நற்கருமங்கள் நிகழும். திருமணப் பேச்சுக்கள் நிறைவெய்தி புதுவாழ்வு ஆரம்பிக்க முடியும். உத்தியோகத்தர்களுக்கு மக்கள் மத்தியில் மதிப்பும், மரியா தையும் உயரும். அலுவலகத்தில் பலரது உதவிகள் கிட்டும். தனித் தொழில் புரிவோர் எதிர்பாராதவாறு வருவாய் பெறுவர். வர்த்தகர்க ளுக்கு வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும். நிறைந்த வருவாய் பெறு வர். மாணவர்கள் கல்வி முன்னேற் றத்தையும் பலரின் நன்மதிப்பையும் பெறுவர்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்ப ராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப உறவுகள் சீராக இருக்கும். பணவருவாய் ஓர ளவு இருப்பினும் - செலவு கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். எடுக்கும் கருமங்களில் அலைச்சல், பிரயாசை காட்டும். எந் தக் கருமத்திலும் நிதானம் தேவை. தேகசுகம் இடையிடையே பாதிக்கப் படலாம். மங்கள கருமங்கள் கை கூடுவதில் காலதாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு, தொழில் மாற்றம் சிரமத்தைக் கொடுக்கும். வர்ததகர்களுக்குத் தொழில் ஓரளவு நன்றாக நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தனித்தொழில் புரிவோருக் குச் சிரமங்கள் அதிகரிக்கும். மாண வர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் ஜனனமானவர்க ளுக்கு இல்லறம் நல்லறமாக விளங் கும். எடுத்த கரு மங்களில் வெற்றி கிட்டும். தொழில் மூலம் பணவரவு திருப்தியாக அமை யும். உறவினர்களுடன் நெருக்கம் கூடுதலாக இருக்கும். தேகசுகம், குடும்பசுகம் பாதிப்படையாது. சில ருக்கு அடிக்கடி பிரயாணங்கள் ஏற் படலாம். மங்கள கருமங்கள் சிறப் பாக நடக்கும். உத்தியோகத்தர் களுக்கு அந்தஸ்து உயரும். விருப் பம்போல் கருமம் நடைபெறும். அதி காரிகள் நட்புடன் பழகுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப் பாக நடக்கும். கணிசமான லாபம் கிட்டும். வங்கி உதவிகள் உண்டு. தனித்தொழில் புரிவோர் வெற்றி கரமாக முன்னேறுவர். மாணவர்க ளுக்குக் கல்வித்துறை வெற்றியளிக் கும். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு.

# தவக்கால நற்சிந்தனை



**'அவர்களும் நோன்பு இருப்பார்கள்'**
**(மத் 9.15)**

வெளிவேடம் கொண்டு வெளி வேடத்துக்காக மற்றவர்கள் காண நோன்பு இருப்பதையல்ல, இறைவன் விரும்பும் நோன்பானது – பசித்தோருக்கு உணவும், வறியவர்களுக்கு தங்க இடமும், உடுக்க உடையும் கொடுத்தலுமாகும். உள்ளம் உடைந்து மனஸ்தாபப்பட்டு பாவங்களை அறிக்கையிட்டு இறைவனிடம் மனம் திரும்பும் உபவாசமே அவருக்குப் பிரிய மானது. உங்களைக் கழுவி தூய்மைப்படுத்துங்கள். உங்கள் தீச் செயலை எம் முன்னிருந்து அகற்றுங்கள். தீமை செய்தலை விட்டொழியுங்கள் என்கிறார் ஆண்டவர். இதன் மூலம் இறை வன் உள்ளத்தூய்மையையே விரும்புகிறார். இந்த நாற்பது நாட்களிலும் பிறர் அறிய தாடி வளர்ப்பதிலும், புலால் உணவை நீக்கி மரக்கறி உணவுகள் உண்பதிலும், சினிமா பார்ப்பதைத் தவிர்ப்பதிலும், சிகரெட் புகைப்பதை நிறுத்துவதிலும் இவற் றையெல்லாம் தவளைக்கத்தல் போல் மற்றவர்களுக்கு கூறு வதையும் அல்ல உண்மையான மனமாற்றத்தையும், மனந் திரும்புதலையுமே தனக்குகந்த நோன்பாக விரும்புகிறார்.

மோ.தார்சீசியஸ்

## போராளிகளின் படுகொலையைக் கண்டித்து

# நாளை நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு

# யாழ். பல்கலை சமூகம் ஆதரவு தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு மீதும் அரசினால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவத்தை கண்டித்து, நாளை சனிக்கிழமை யாழ். குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. எனவே, நாளைய ஹர்த்தாலில் அனைவரையும் பங்கேற்குமாறு, யாழ். பல்கலைக்கழக சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.**

இது தொடர்பாக யாழ். பல்கலைக் கழக சமூகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த போராளியும் மட்டு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரு மான இ.கௌசல்யனும், சக போராளி களினதும் இழப்பானது, தமிழ் மக்களுக் கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது டன் இராணுவத்தினுடைய இந்தத் திட்ட மிட்ட சதி வேலையினால் பெரும் சீற்றத்தை யும் தமிழர்கள் அடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசியத்தினைச் சிதைக்கும் நோக்குடன் கருணா என்ற தேசத்துரோகி யினால் பிரதேசவாதம் என்கின்ற சதி வலை விரிக்கப்பட்டபோது, தமிழ்த் தேசி யத்தின் ஒற்றுமையை நிலை நிறுத்துவ தற்கும், துரோகி கருணாவினுடைய துரோ கத் தனத்தை அழிப்பதற்கும் அர்ப்பணிப் புடன் முன்னின்று உழைத்த போராளி தான் இ.கௌசல்யன். ஆகவே, இவரு டைய இழப்பு இன்று தமிழர்களுடைய ஆன்மாவை சோகக்கடலில் சங்கமிக்க வைத்துள்ளது.

போரினால் வெல்ல முடியாத புலி களை சமாதானம் என்ற பொய் வேசத்தை, மாயத்திரையை வைத்துக்கொண்டு சதி வேலைகளைத் திட்டமிட்ட வகையில் நிறை வேற்றிக் கொள்வதிலேயே அரசாங்க மும் இராணுவமும் செயற்படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை யாகும். இதன் தொடர் நிகழ்வாகவே கௌசல்யன் உட்பட்ட போராளிகளின் படுகொலையும் இடம் பெற்றுள்ளது.

உலக நாடுகளுக்கு, இலங்கை அர சாங்கம் சமாதானத்தின் மீது ஆர்வம் இருப்பதாக மாயத் தோற்றத்தை காட்டிக் கொண்டு, மறுமுனையில் தமிழ் மக் களையும், தமிழ் மக்களின் ஏக பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலி களையும் நசுக்குவதற்கான திட்டங் களையே மேற்கொள்வதில் முனைப்புப் பெற்றுள்ளது. தொடர்ச்சியாக இவ் வாறான தாக்குதல்கள் மூலம் தமிழர் களைப் போருக்குச் சீண்டிவிடும் நட வடிக்கைகளையே மேற்கொண்டு வரு கிறது.

உண்மையில் இ.கௌசல்யன் மீதான படுகொலை திட்டமிட்ட வகையில் இரா ணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிப்படையான உண்மை நிலையாகும். இதனை மூடி மறைப்ப தற்காக உண்மையை இருட்டடிப்புச் செய்யும் நோக்குடன், இராணுவத் தடை முகாம் ஊடாகச் செல்லும்போது இராணு வப் பாதுகாப்பு அனுமதி பெறவில்லை என்றும், அவர்களுடைய பயணம் தொடர்பாக இராணுவத்தினருக்குத் தெரி யாது என்றும், இராணுவம் உண்மையை மறைக்கவே முயல்கின்றது. ஆனால், இ.கௌசல்யன் பயணம் செய்யும்போது தடைமுகாமில் பதிவினை மேற்கொண்டு சென்றார் என்பதுதான் உண்மை.

இதனைவிட, இ.கௌசல்யன் அரசி யல் பணியை முன்னெடுக்கின்ற ஒரு போராளியாவார். அரசியல் போராளிகள் எந்தப் பகுதிக்கும் சென்று, தமிழ் மக்களுக் கான அரசியல் பணிகளை முன்னெடுக் கலாம் என்று போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, அரசியல் போராளி எந்த இடத் துக்கும் எந்த நேரத்திலும் செல்வதற் கான அனுமதி ஏற்கனவே ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது. எனவே திட்டமிட்ட வகையில் படுகொலையை முன்னெடுத் துக் கொண்டு அதனை மூடி மறைக்க முயற்சிப்பது எந்த வகையில் நியாயமாக அமையும்?

கருணா குழு என்ற குழுவே மட்டக் களப்பு, அம்பாறையில் தற்போது இல்லை. இலங்கை இராணுவமே அந் தக் குழுவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு தனது சதிவேலைகளை முன் னெடுக்கின்றது என்று ஏற்கனவே இ. கௌசல்யன் குறிப்பிட்டார். எனவே, இங்கு ஒரு உண்மை நிலையை இராணு வம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண் டும். கருணா என்ற குழு தமிழ்த் தேசி யத்தை விட்டு முற்றுமுழுதாக அழிக்கப் பட்டும், வெளியேற்றப்பட்டும் விட்டது. அதனுடைய பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இராணுவம் தனது கைவரிசை களைக் காட்ட முனையுமாக இருந்தால், இது சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்துவதாக அமையும்.

இனியும் இவ்வாறான படுகொலை களை நிறுத்தி, இலங்கையில் நிலைத்த சமாதானம் ஒன்றை ஏற்படுத்த இதய சுத்தியுடன் அரசாங்கம் முன்வரவேண் டும். இயற்கையின் சீற்றம் காரணமாக, சின்னாபின்னமாகிச் சிதைந்து போயுள்ள மக்களுக்கான மறுவாழ்வை ஏற்படுத்து வதற்காக ஒன்றுபட்டு உழைக்க வேண் டிய, ஒன்றுபட்டு நிற்கவேண்டிய நேரத் தில் தமிழ் மக்களை ஆத்திரம் கொண்டு வெகுண்டெழச் செய்யும் செயற்பாடு களை அரசாங்கமும், இராணுவமும் கைவிடவேண்டும் என்பதனை வலியு றுத்துகிறோம்.

ஆகவே, இலங்கை இராணுவத்தின ரின் சதிவலையில் சிக்கி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கும், நாட்டுப் பற் றாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித் துக்கொள்வதுடன், இந்தப் படுகொலைச் சம்பவத்தை எதிர்த்து நாளை சனிக் கிழமை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் முன்னெடுக்கும் பூரண ஹர்த்தா லுக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவ துடன், சகல அமைப்புக்களையும், பொது மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இனத்தைக் கொன்றொழிக்கும்

# நடவடிக்கைகள் தொடரும் என்பதையே போராளிகள் படுகொலை நிரூபித்துள்ளது

### கிளி. அரச சார்பற்ற இணையம் ஜனாதிபதிக்கு கடிதம்

அரசும், அரசின் தலைவியும் ஜனாதி பதியுமான நீங்களும் – தமிழ் மக்களின் கௌரவமான உரிமைகளை வழங்கி சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு தீர்வுக்கு வழிவகுப்பீர்கள் என்பதை நம்பியே, விடுதலைப் புலிகள் பேச்சுக் களில் ஒத்துழைத்து வருகின்றனர். ஆனால், அரசும் ஜனாதிபதியாகிய நீங்க ளும் இந்தத் தேசத்தினுடைய தமிழ் இனத்துக்கு ஒரு பாதுகாப்பான வாழ் வைத் தரமாட்டீர்கள் என்பதுடன், இன வாத சக்திகளுடன் சேர்ந்து தமிழ் இனத் தைக் கொன்றொழிக்கும் நடவடிக்கை களைத்தான் தொடரப் போகின்றீர்கள் என்பதை, மட்டு – அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகள் படுகொலை செய் யப்பட்டதன் மூலம் நிரூபித்துள்ளீர்கள்.

இவ்வாறு மட்டு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல் யன் உட்பட போராளிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் கிளிநொச்சி மாவட்ட அலு வலகத்தின் ஊடாக ஜனாதிபதி சந்திரி காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

விடுதலைப் புலிகளின் மட்டு – அம் பாறை மாவட்டங்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், அம் பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ ரியநாயகம் சந்திரநேரு வும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிக் கந்தப் பிரதேசத்துக்குள் வைத்துப் படு கொலை செய்யப்பட்டதை ,அரச சார் பற்ற நிறுவனங்களின் இணையம் மிக வும் வன்மையாகக் கண்டிக்கிறது.

சமாதானப் பேச்சு ஒப்பந்தத்தின் பின்பு படிப்படியாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் குறிப்பாக இராணுவ, பொலிஸ் பிர தேசங்களில் வைத்து தங்கள் படைப்பிரி வினரால் படிப்படியாக, தமிழ் மக்கள் மீதும் விடுதலைப் புலிகளின் அரசியல் பக்கத்தினருக்கும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீதும் செய்துவரும் கொடுமைகளால் நாம் படும் அவதிகள் குறித்து தங்கள் படையினரைக் கட்டுப் படுத்தி உண்மைச் சமாதானத்துக்கு ஒத்து ழைக்குமாறு கடந்த 19 ஆம் திகதி கண் டன வேண்டு கோள் கடிதம் ஒன்றைத் தங்களுக்கு அனுப்பியிருந்தோம்.

அதன்பின் 13 நாட்களுக்குள் தங் கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் அரச படைகளாலும், தேச விரோதக் கும்பல்களாலும் இந்தப் படுகொலை திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளது. தாங்கள் காலம் கடந்தும் விசாரணைக் குழுக்களை அமைக்காத நிலையில் கௌசல்யனும் அவரோடு பயணம் செய்தவர்களும் படுகொலை செய்யப்பட்டதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தலைமையில் நீதியான விசாரணை களை மிக விரைவாக ஏற்படுத்துமாறு கேட் டுக்கொள்கிறோம்.

தாங்கள் நீதியான விசாரணைகளை மிக விரைவாக ஏற்படுத்தி இவ்வாறான அராஜக செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு இணையம் கேட்டுக்கொள்கிறது.

எமது மக்களின் மகஜர்களுக்கு மதிப்பளிக்காத நடவடிக்கைகள் தொடரு மானால் – இலங்கை நாடு முழுவதும் வெகுஜனப் போராட்டங்கள் தொடக்கப் படும் என்பதை இந்த நாட்டின் சமாதானப் பிரியர்கள் அனைவருக்கும் இணையம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. தங் களின் நடவடிக்கைப் பதிலை இணையம் எதிர்பார்த்து நிற்கிறது எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மட்டு-அம்பாறை மாவட்ட அர சியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள் படுகொலை செய்யப்பட்டமை யைக் கண்டித்து பல்வேறு தரப் பினரும் வெளியிட்ட கண்டன அறிக்கைகள்**

## போராளிகளின் படுகொலைச் சம்பவம்

# சமாதானம் விரும்பும் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட மிகப் பெரும் சவாலாகும்!

### யாழ். மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம் அறிக்கை

மட்டு – அம்பாறைமாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் அரிய நாயகம் சந்திரநேரு உட்பட்டோர் படுகொலை செய்யப்பட்டமையானது, சமாதானத்தை விரும்பும் தமிழ்மக்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாகுமென யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது–

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை நிறைவேற்றத் தடைகளைப் போட்டு வரும் அரசு, இப்போது சுனாமி அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் அரசும் அதன் படைகளும் தடையாக இருக்கின் றன என்பது தற்போது நிரூபணமாகி யுள்ளது.

சமாதானப் போர்வையைப் போர்த் துக் கொண்டு மீண்டும் யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு அரசு தயா ராகிவருவதையே இந்தப் படுகொலைச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக் கைகள் தொடர்பாக விடுதலைப்புலி களின் தலைமையுடன் விரிவாக ஆராய் ந்து பல்வேறு நலத்திட்டங்களுடன் கிளி நொச்சியிலிருந்து புறப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒரு வரான கௌசல்யன் கொல்லப்பட்டிருப் பது, தமிழ் நெஞ்சங்களில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கொலைச்சம்பவம் நாட்டில் தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை என் பதை உணர்த்தியிருக்கிறது. சிங்களப் படைகளால் தமிழ் மக்களுக்கு ஒரு போதும் பாதுகாப்பு வழங்க முடியாது. ஏனெனில், கடந்த கால வரலாற்றில் அரச பயங்கரவாதத்தினால் தமிழர்கள் வகை தொகையின்றி கைதுசெய்தும் சித்திரைவதைக்குள்ளாகியும் வந்துள்ள னர்.

பல்லாயிரம் தமிழர்கள் இனப்படு கொலைக்கும் ஆளாகியுள்ளனர். இந்த வரிசையில் விடுதலைப் போராளிகளை யும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களையும் திட்டமிட்டு ஆட்சியாளர்கள் கொன்று குவித்து வருகின்றனர். தமிழர் தாய கத்தை விட்டு அரசபடைகள் வெளியேறி னால்தான் தமிழருக்குப் பாதுகாப்புண்டு. கிழக்கில் நிலவிய அமைதியான சூழ் நிலையைக் குழப்ப, சமாதானத்தை சிதைக்க விரும்பும் தீய சக்திகளை அரச படை இணைத்துக்கொண்டு இவ்வாறான கொலைச் சம்பவங்களில் ஈடுபட ஆட்சி யாளர்கள் அனுமதிப்பார்களேயானால், தமிழர்கள் மீண்டும் யுத்தத்தை எதிர் கொள்ளத் தயாராகவே இருக்கிறார்கள் என்பதைத் தெட்டத் தெளிவாக தெரிவிக்க விரும்புகின்றோம்.

அரசு இவ்வாறான கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மீறின் வடக்கு – கிழக்கு ஆயுதப்படைக்கெதிராக போராட்டம் வெடிக்கும் என மேலும் தெரி விக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஒரே கூரையின் கீழ் கம்பியூட்டர், எலக்ரோனிக்ஸ் மற்றும் நெற்வேர்க்கிங் பொருட்கள் அதுவும் கொழும்பு நிர்ணயவிலையில்... இந்திய பொறியியல் துறையில் அதி உன்னத எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிக்கேசன் துறையில் முதன்மை எஞ்சினியரிங் பட்டம் பெற்ற பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்படும் ஒரு உன்னத நிறுவன வழங்கல்கள் வெகுவிரைவில் உங்கள் கைகளில்....

**Our Special packages**

- New 550, 600, 733, 800, 1GHz Compaq PIII 128 SDRAM,10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor,Keyboard, Mouse **Rs. 32,000/- முதல்**
- New PIV 128 SDRAM,40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM,.ATX Tower with Front USB & Audio, 15" color Monitor,Keyboard, Mouse **Rs. 48,900/- முதல்**
- தரமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் TV, VCR மற்றும் CD, DVDகள் @ Colombo based price

கம்ப்யூட்டர் துறையில் எந்தவொரு எலக்ரோனிக் பொருட்களையும் இணைக்க முடியும். அதற்குரிய ஆராய்ச்சி, மல்டிமீடியா சொலூசன், எலக்ரோனிக்ஸ் பகுப்பாய்வுகள், திருத்தங்கள், புதுப் பொருட்கள் உருவாக்கம் மிக்ஸ்ட் எலக்ட்ரானிக்ஸ் எனப்படும் அனலக், டிஜிட்டல் சேர்ந்த இயக்கங்கள் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் கைதேர்ந்த அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களின் ஆய்வுக்கூடாகக் கொடுக்கப்படும்.

*All with 3 years immediate Replacement warranty

**Special Opening Offer**
**Latest Computer Table, Screen Filter, Mouse Pad, Dust Cover & Etc.**
நிபந்தனைக்குட்பட்டது. வரையறுக்கப்பட்ட 3 தினங்கள் மட்டுமே

Never Fever Against Technology
**Knowledge beyond the technology. That's CeSCO**
Real imported products @ Lower Price

A Bright solution providing centre
இல்லை என்று எதுவுமில்லை
CeSCO A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite. A PLACE for All Computing, Electronics & Networking

வைபவம் நேரம்: 9.30 – 10.00
காலம்: 11.02.2005
தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

**CeSCO**
56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி பின்புறம்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதி விடுவிப்பு!

## மேன்முறையீட்டு நீதிமன்று தீர்ப்பு

காரைநகர் கடற்படை முகாமைத் தாக்கி கடற்படையினரைக் கொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டி தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ்க கைதி ஒருவர் நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகசுந்தரம் ரகுபதி என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

1990 ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி காரைநகர் கடற்படை முகாமைத் தாக்கி கடற்படையினரை படுகொலை செய்தார் எனத் தெரிவித்து 1997 ஆம் ஆண்டு குறித்த நபர் கொழும்பு ரத்மலானையிலுள்ள அஸ்பெஸ்டஸ் சீற் கம்பனியில் பணியாற்றிக்கொண்டிருந்த வேளை, கைதுசெய்யப்பட்டார்.

அப்போது அவருக்கு 29 வயதாகும். இதனை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில்- அண்மையில் பாதாள உலகக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நீதிபதி அம்பேபிட்டிய தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். இதனை எதிர்த்து குறித்த நபரின் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார்.

இந்த நிலையில் இந்த வழக்குத் தொடர்பான மேன்முறையீட்டு விசாரணை கடந்த வாரமும், நேற்றும் இடம்பெற்றன. இதில் ரஞ்சித் பெர்ணான்டோ மற்றும் அ.விநாயகமூர்த்தி என இரண்டு சட்டத்தரணிகள் குறித்த நபர் சார்பில் ஆஜராகி இருந்தனர்.

இவர்கள் இருவரின் வாதங்களைக் கேட்ட காமினி அபேயரட்ண மற்றும் இமாம் ஆகிய நீதிபதிகள் குறித்த நபருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லையெனத் தெரிவித்து அவரை விடுதலை செயவதாகத் தமது தீர்ப்பில் தெரிவித்தனர்.

# ஐந்து உருக்குலைந்த சடலங்கள் திருமலையில் கரையொதுங்கின!

(திருகோணமலை)

சுனாமி பேரனர்த்தத்தில் அகப்பட்டு உயிரிழந்தவர்களுடையதாக இருக்கலாமென நம்பப்படும் மேலும் 5 சடலங்கள் திருமலை கடற்கரைப் பகுதிகளில் நேற்றுமுன்தினமும், நேற்றும் கரையொதுங்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் திருமலை சீனன்குடா கடற்கரைப் பகுதியில் சடலமொன்று கரையொதுங்கியது. நேற்று அதிகாலை இதே கடற்கரைப் பகுதியில் இரண்டு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இவற்றில் ஒரு சடலம் தலையில்லாமலும், மற்றையது காலில்லாமலும் காணப்பட்டன.

நேற்று நண்பகலளவில் சல்லி மற்றும் குச்சவெளி கடற்கரைப் பகுதிகளில் ஒவ்வொரு சடலங்கள் கரையொதுங்கின. இந்தச் சடலங்கள் ஆணா அல்லது பெண்ணா என்று தெரியாத அளவிற்கு உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்தச் சடலங்கள் அனைத்தும் பொலிஸாரால் மீட்கப்பட்டு திருமலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு சடலம் வெளிநாட்டுப் பிரஜையினுடையதாக இருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்தனர். (10)

# இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்!

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அடுத்தமாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று இந்தியப் பிரதமரின் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் மூலம்- இந்திய, இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி 1987 இலும், சார்க் மாநாட்டுக்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 1988ஆம் ஆண்டிலும் விஜயம் செய்த பின்னர் இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை டாக்டர் மன்மோகன் சிங் பெறுகிறார்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் விஜயத்தின்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## பல்லாயிரக்கணக்கானோர்...

செங்கலடி - பதுளை வீதி கொடுவாமடு பாலம் ஊடாக தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இவர்களின் வித்துடல்கள் எடுத்துச் செல்லப்பட்ட வீதியின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து கண்ணீர் மல்க தமது இறுதி வணக்கத்தை செலுத்தினார்கள்.

தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்னால் அமைந்துள்ள தமிழ் கலவன் பாடசாலையில் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் மார்ஷல் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இதில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ஜெயானந்தமூர்த்தி, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனத்தைச் சேர்ந்த ஏ.எல்.ஜவால் ஆகியோர் வீரவணக்க உரையை நிகழ்த்தினர்.

வீரவணக்க உரையை அடுத்து வித்துடல்கள் துயிலுமில்லம் எடுத்துச்செல்லப்பட்டு புனிதவிதைக் குழிகளில் விதைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விடுதலைப்புலிகளில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களென பலர் கலந்து கொண்டனர். குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டனர். (07)

## பொதுக் கட்டமைப்பு ...

கொழும்புவந்தடைந்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சமாதான நடவடிக்கைகள் மற்றும் நிகழ்கால நிலைமைகள் என்பன குறித்து, அகாஷி அரச தரப்பினருடனும், ஏனைய தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்துள்ள அகாஷி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய உயர் மட்டத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து சமாதானம் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவார் என்று ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளையும் சந்திக்கவுள்ளார்.

இதனைத் தவிர சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மற்றும் தென் பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 36 போராளிகள்...

தரைவழியாக மட்டக்களப்புக்குச் சென்றனர்.

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாகச் சென்ற இவர்களுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்கியது. அத்துடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கூடான போக்குவரத்தின்போது படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

கேணல் ரமேஷ், கரிகாலன் உள்ளிட்ட 36 போராளிகள் நேற்று மாலை மட்டக்களப்பைச் சென்றடைந்தனர். இவர்கள் தாண்டியடியில் இடம்பெற்ற இறுதிவணக்க நிகழ்வில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். குடாநாட்டில் நாளை..

வைத்து நிராயுதபாணிகளாகச் சென்ற கௌசல்யனும், போராளிகளும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இலங்கை அரசினதும் இராணுவத்தினதும் ஆற்றாமையை வெளிப்படுத்துவதோடு அவர்களை கீழ்நிலைக்கே இட்டுச் செல்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ் சீருடைகளில் வந்தவர்களே இந்தப் படுகொலையைச் செய்தார்களென நிருபிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கண்டிக்கும் முகமாகவும் அரசின் பொய் முகத்தை அம்பலப்படுத்தவும் லெப். கேணல் கௌசல்யன் உட்பட போராளிகள் மற்றும் சந்திரநேரு ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் நாளை பூரண துக்கத்தை அனுஷ்டிப்போம்.

அன்றைய தினம் வியாபார ஸ்தாபனங்களைப் பூட்டி, அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு, சோககீதங்களை இசைக்கச் செய்து, அனைத்து மக்களும் இந்த துக்கதினத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதோடு, அரசின் கீழ்த்தரமான படுகொலை முயற்சிகளுக்கு எதிர்ப்பினை தெரிவிப்பதோடு,

அவசர தேவைகளை நிறைவேற்றுபவர்களின் போக்குவரத்துக்கு பாதகம் ஏற்படாவண்ணம் எதிர்ப்பினைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துனித்துவத் தன்மையுள்ள பிரகாசமான விடிவெள்ளியொன்று இன்று பிரகாசிக்கிறது

விபரம் பக்கம் 11 இல்

# எமது பலம் எப்படிப்பட்டதென்பதை...

கௌசல்யனோடு நீண்டகாலமாக ஒன்றாக இருந்து, ஒன்றாக உணவருந்தி, ஒன்றாகப் பயணித்திருந்துள்ளோம்.

தமிழீழ விடுதலை கலங்கிப் போயிருக்கிறது. ஏனெனில் அவருக்கென்று சில பதிவுகள் இருக்கின்றன.

நாங்கள் காலங்காலமாக வாழ்ந்த தாயகப் பூமியைச் சிதைக்கச் சிங்களப் பேரினவாதிகள் எடுத்த முயற்சிகளை எல்லாம் முறியடிப்பதில் எமது தேசமும் எமது மக்களும் தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள்.

அந்த வரலாற்றுத் தொடர்ச்சியை சிங்கள இனவாதிகள் மீண்டும் தங்களுடைய கைங்கரியத்தை நிறைவேற்ற முயன்றுள்ளார்கள். விரோதிகளை உருவாக்கி எங்கள் தேசத்தின் ஒற்றுமையைக் குலைத்து, பிளவுபடுத்தி, எங்களுக்குள்ளேயே மோதல்களை உருவாக்கி எங்கள் மக்களை, எங்கள் தேசத்தை அழிக்க முனைந்துள்ளார்கள்.

அதில் முன்னிலையில் நின்று உண்மையிலேயே இந்தச் சதியை உடைத்தெறிந்து மீண்டும் தமிழ்த் தேசத்தை ஒன்றிணைப்பதற்கு எங்கள் தலைவனின் தலைமைத்துவத்தில் மீண்டும் ஒருங்கமைத்த ஒரு முன்னணி வீரன் கௌசல்யன் என்பதை எல்லோரும் அறிவர்.

வெளிநாடுகளுக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயணித்த வேளையில், அங்கே தான் மக்களை நேரில் சந்திக்கமுடியாத இடத்தில் கௌசல்யன் மற்றும் பொறுப்பாளர்களும் சென்று எமது மக்களுடன் பல சந்திப்புக்களை நடத்தினார்கள்.

அப்போது எங்கள் கௌசல்யனைக் கட்டியணைத்து முத்தமிட்டு பலர் கண்ணீர் விட்டார்கள். இழந்த இந்த வீரனை நேரில்காணக் கொடுத்துவைத்தவர்கள் என்று கூறினார்கள்.

எமது உரிமைப் போராட்டத்தை சர்வதேச நாடுகள் இன்று அங்கீகரித்து வருகின்றன. ஐ.நா. செயலாளர்கூட இந்தப் படுகொலைகளைக் கண்டித்தும், அனுதாபம் தெரிவித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

உலக அரங்கில் எமது போராட்டம் பலமடைந்துள்ளதென்பதை இது தெளிவுபடுத்துகிறது. ஆனால் எதிரிகள் மட்டும்தான் எதையும் உணராமல் தமிழ்த்தேசியத்தைச் சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

நாம் போராட்ட காலத்திலும் தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைப்பதற்கான எதிரிகளின் சதிகளைச் சந்தித்து வந்துள்ளோம். தற்போது அமைதியான காலகட்டத்தில்கூட பாரிய சூறாவளியையும், பூகம்பங்களையும் சந்திக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இருந்தாலும் நாம் எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலாலும் எமது மக்களின் ஒற்றுமையான செயற்பாட்டாலும் எமது பலம் என்ன என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம்.

இன்று நடைபெறும் சம்பவங்கள் காரணமாக எமது தளபதிகள், போராளிகள் மற்றும் மக்களின் உணர்வுகள், அவர்களது பொறுமையின் எல்லைக்கே வந்துள்ளனர். இருந்தாலும் நாம் வெகுவிரைவில் எமது தலைவரின் வழிகாட்டுதலில் எமது மக்களுக்கான நல்ல வழியை உறுதிப்படுத்துவோம்.

எமது உரிமைப்போராட்ட பயணத்தின்போக்கு, எதிர்காலம், அதன் பலம் இவையனைத்தையும் இலங்கை அரசும் அதற்கு துணைபோகும் சக்திகளும் உணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

தமிழீழத் தேசியத்தை அழிக்க நினைத்து செயற்பட்ட அனைத்து சக்திகளுக்கும் எமது மக்கள் தங்களது ஒற்றுமை மூலமும், எமது தலைமைத்துவத்துக்காக அவர்கள் காட்டிய விசுவாசத்தின் மூலமும் தோற்கடித்துள்ளார்கள். அதேபோன்று மிக விரைவில் எமது தமிழ்த் தேசியம் வெற்றிப்பாதையில் செல்லும்.

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் இந்த பிராந்தியத்தில் தமிழ் முஸ்லிம்மக்களின் நல்லுறவிற்காக அரும்பாடுபட்டவர். அவர் தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம் மக்களையும் ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்திவிடுவார் என்ற அச்சத்தில்தான் எதிரிகள் இந்த கைங்கரியத்தை செய்துள்ளனர். என்றாலும், கௌசல்யன் காட்டிய பாதை, அவர் செயற்பட்டபோக்கு அனைத்தும் அவருக்காக அவர் நினைத்தது, அவர் எண்ணியது, அவர் செயற்பட்டது அனைத்தையும் நாம் செயற்படுத்துவோமென அவர் மேலும் தெரிவித்தார்.


## திருமறைக் கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS
### விண்ணப்பங்கள் கோரல்

**நாடகப் பயிலகம்** *(SCHOOL OF DRAMA)*

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2005ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெறவிரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுடையது.

**சிறுவர் கலைக்கூடம்** *(CHILDREN'S THEATRE)*

இந்தக் கலைக்கூடத்தில் 2005ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் சேர்ந்து பயிலவிரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதிற்கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.

பிரிவு 1 (5-10வயது)
பிரிவு 11 (11-14வயது)
பிரிவு 111 (15-17வயது)

**ஓவியக் கலைவட்டம்** *(ARTIST'S GUILD)*

ஓவியக் கலைவட்டமானது ஓவியக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், ஓவியம் தொடர்பான பயிற்சியைப்பெற விரும்புவர்களுக்கும் மிகவும் பயனுடையது.

**குறிப்பு :**
- ☆ அனைத்துப் பிரிவுகளுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 25-02-2005 வெள்ளிக் கிழமை ஆகும்.
- ☆ விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ☆ கவின்கலைகள் பயிலகம் (SCHOOL OF FINE ARTS) விரைவில் புதிய பொலிவுடன் ஆரம்பமாகும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222-2393

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.